# உறவுகள்

*Uravukhal*

ஐப்பசி கார்த்திகை மார்கழி 2021

Amonerie Tamoule catholique Srilankaise 57, Bld de Belleville, 75011 - PARIS - FRANCE.

இதழ் 80

இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப்பணியகத்தின் காலாண்டுப் பத்திரிகை

"இதோ, மாபெரும் நற்செய்தி இன்று நமக்காக மீட்பர் பிறந்துள்ளார்".

லூக்கா 2 : 10-11




**பாடுவோம் பாடுவோம் மீட்பின் நற்செய்தியை**

# உறவுகள்
Uravukhal

**தலைவர்:**

அருட்பணி: போல் மத்தியூ மதன்ராஜ்
பணியக இயக்குனர்

**உறவுகள் குழு:**

திரு: என். எம் ஜெயரட்ணம்
திருமதி: றெஜீனா சிவகுமாரன்
திரு: ஆனந்தன் செபமாலை
திருமதி: தயாளினி வில்லியம் றெஜினோல்ட்
திருமதி: ஏஞ்சல் யேக்கப்
செல்வி: புளோறன்ஸ் யாழ்நிலா

**ஆலோசகர்:** திரு: ரி. எம். சந்தியாகு

**தொடர்புக்கு:**

« URAVUKAL »
Aumônerie Tamoule Catholique Srilankaise
Chapelle Notre Dame Réconciliatrice
57, Bld de Belleville
75011 Paris - France

**Tel:** 01 48 06 95 05
**E - mail:** uravukhal.france@gmail.com
**Website:** www.uravukal.org

**வெளியீடு:**
இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் - பிரான்ஸ்

No 80
2021

**சந்தா விபரம்**
தனிப்பிரதி ஒன்று: 2€
வருடச் சந்தா விபரம்: 20€
ஏனைய நாடுகளுக்கு: 22€

**கணினி வடிவமைப்பு:** றெஜீனா சிவகுமாரன்


## ஆசிரியர் எண்ணம்

### மனிதா நீ எங்கே இருக்கிறாய்?
### மனிதரை நோக்கிய மனுமகனின் தேடல்

கடவுள் தான் படைத்த அனைத்தையும் நல்லது என்று கண்டார்.

ஆனால் மனிதனை படைத்தபோது மிகவும் நல்லது என்று கண்டார்.

காலத்தின் ஓட்டத்தில் மனிதன் பல மாற்றத்திற்கு உள்ளானான். படைக்கப்பட்ட மனிதன் படைத்தவனாக மாற்றம் பெற ஆசைப்பட்டான். இதனால் இறைவனை விட்டு தூரச் செல்ல ஆரம்பித்தான். என்னை விட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய முடியாது என்பதை மனித இனம் உணரவில்லை. இதனால் மனிதன் நமபிக்கையை விட அறிவியலை முதன்மைப்படுத்தவும், மனிதனை விட உலக பொருட்களையும், பொதுநலத்தை விட சுய நலத்தையும், முன் நிறுத்த ஆரம்பித்து விட்டான். இதனால் கடவுள் மனிதனை தேடும் படலம் ஆரம்பமாகியது.

இன்று ஒரு போதும் இல்லாத அளவுக்கு மனித இனம் பல்வேறுபட்ட எதிர்மறையான எண்ணமும், அதனுடைய எதிர்அலைகள் உலகை வியாபித்துள்ளது.

அன்பை அவமதித்தலும், நீதியை புறம் தள்ளுதலும், அநீதியை கண்டும் காணாமல் இருப்பதும், பதவியைத் தக்க வைக்க எதையும் செய்யத் துணிவதும், மக்களின் சார்பாக குரல் கொடுக்க வேண்டிய நேரத்தில் மௌனமாக இருப்பதும், இவ்வாறு தீயவனின் செயற்பாடு தலை விரித்து தாண்டவம் ஆடுகின்றது.

இவ்வாறு படைத்தவரை விட்டு விலகி படைக்கப்பட்ட பொருட்கள் மீது அதி கூடிய கடவுளின் ஆசீர்வாதத்தை இழந்ததால், சகோதர கொலை, ஏமாத்துக்கள், இவ்வாறு தீயவனின் விளைவுகள் விதைக்கப்பட்டது. தீமை வளர்ந்து சாவை உண்டாக்கியது. இவ்வாறான நேரத்தில் கடவுள் மனிதனை தேடும் படலம் ஆரம்பமாகியது. கடவுள் மனிதனை நோக்கி மனிதா! நீ எங்கே இருக்கின்றாய்? ......

இவ்வாறு கடவுள் மனிதனை தேடிய படலம். இன்று மனிதன் மனிதனை தேடுகின்றான்.

ஏனெனில் மனிதன் கடவுளின் ஆசீரை விட்டு தூரத்திற்கு சென்று கொண்டிருக்கிறான். கடவுளின் ஆசீயை விட்டு உலகத்தின் மாயைக் கவர்சியின் வலையில் சிக்குண்ட மானிட சமூகம் அதனுடைய விளைச்சலை இன்று அறுவடை செய்கின்றது. எங்கும் எதிலும் ஊழல், பதவி மோகம், அதிகார வெறி, அடாவடித்தனம், அடக்குமுறை இவ்வாறு நீண்டுகொண்டே செல்லுகின்றது பட்டியல்.

மனிதா "உலகம் முடியும்வரை உங்களோடு இருப்பேன்." என்ற இயேசுவின் பிரசன்னம் எமக்கு எப்போதும் உடன் இருக்கும். நாம் இயேசுவோடு இணைந்து இருக்கவும், கனிகொடுக்கவும், சிறப்பாக பாலகனின் பிறப்பு, எமக்கு புதிய ஆண்டில் நோய் நீங்கி மகிழ்வோடு வாழ, பாலகன் இயேசு அருள் பாலிக்க வேண்டும் என்று வேண்டி நிற்கின்றேன்.

இனிய வாழ்த்துக்கள்!!

**உறவில் நிலைக்கும்...**

**அருட்பணி: போல் மத்தியு மதன்ராஜ். அ.ம.தி**



# தீவனத் தொட்டியே திருப்பலிப் பீடம்



பணி. ஜான்பீட்டர் வல்லபதாஸ்,
கப்புச்சின்

மனுவுருவாதலில், இறைவனின் தாழ்ச்சியும், அன்பும், மானிட மீட்பின் திருவெளிப்பாடாக விளங்குகிறது. 1223ம் ஆண்டில், கிரேச்சியோ என்ற இத்தாலிய சிற்றூரில், ஒரு மலை குகையில், புனித பிரான்சிஸ் அசிசியார், பெத்லேகேம் குடிலை உயிரோட்டமாக அமைத்து, கிறிஸ்து பிறப்பை மக்களோடு கொண்டாடினார். அன்றைய இரவு திருப்பலியில், அவர் குழந்தை வடிவில் செய்யப்பட்ட சிசு பாலன் சுரூபத்தை தன் கையில் ஏந்தியவராய், நெகிழ்ச்சிமிக்க, உணர்வு பூர்வமான ஒரு மறையுரையை ஆற்றினார்.

அந்த மறையுரையில் அவர், ‘ பெத்லேகேம் பாலன்’ என்று உச்சரித்த போதும், ‘ பாலன் இயேசு’ என்று சொன்ன போதும், அளப்பரிய ஆனந்தமும், கட்டற்ற கருணையும் பொங்கி எழுந்தது. உலகின் மேல் இறைவன் கொண்ட அன்பை விவரித்து, அனைவரையும் பேருவகையில் ஆழ்த்தினார். வரலாற்று ஆசிரியர்கள், தாமஸ் சொலானோ மற்றும் புனித பொனவெந்தூர் போன்றோர், இந்நிகழ்வை, குறிப்பிடுகின்றனர். திருச்சபை வரலாற்றில் முதல் முதலாக ‘ பாலன்’ இயேசு என்ற சொல்லை, புனித பிரான்சிஸ் தான், இந்த முதல் கிறிஸ்மஸ் குடிலில் பயன்படுத்தினார். ‘ ஆண்டவர்’ இயேசு என்று மட்டுமே சொல்லப்பட்ட திருச்சபையின் வழக்கில் ‘ பாலன்’ இயேசு என்று பிரான்சிஸ் குறிப்பிட்டது, இறைவனின் தாழ்ச்சி, மென்மை, பேரன்பு போன்றவற்றை வெளிப்படுத்துகிறது.

இன்னொரு விடயமும் இந்த நிகழ்வில் கவனிக்கத்தக்கது: தீவனத்தொட்டியில் கிடத்தப்பட்ட ‘ பாலன்’ இயேசுவைக் (லூக் 2:7) கொண்டாடுகின்ற கிறிஸ்மஸ் விழாவில், புனித பிரான்சிஸ் ஆழமான கருத்தாழமிக்க ஒரு காரியம் செய்கிறார். குகை குடிலின் தீவனத்தொட்டியின் மேலே திருப்பலிப் பீடத்தை அமைக்கிறார். அங்குதான் திருப்பலி தொடர்கிறது. அவரது மறையுரைக்குப் பிறகு பிற்காலங்களில் பிரான்சிஸ்கன் மரபில் ‘ பெத்லகேம் தீவனத்தொட்டி,’ ‘ திருப்பலிப் பீடமாக’ முக்கியத்துவம் பெற்று வழக்கத்திற்கு வருகிறது – ‘ கல்வாரி மலை’ க்கும் ‘ இறுதி இராவுணவு’ க்கும் கொடுக்கப்பட்ட அழுத்தத்தை விட!

புனித பிரான்சிஸை பொறுத்தவரையில், இயேசுவின் மீட்புச் செயலுக்கு அவரின் ‘ மனுவுருவாதலே’ முதல் முக்கியத்துவம் கொள்கிறது. அதை தொடர்ந்தே, பாடுகள்–சிலுவைச் சாவு–உயிர்ப்பு எல்லாம் நினைவு கூரப்படுகிறது. பின்னாளில் தனது ‘ அறிவுரைகளில்’ புனித பிரான்சிஸ் எழுதுகிறார்: “ ஒவ்வொரு நாளின் திருப்பலியிலும், கன்னிமரி அன்னையின் திருவயிற்றிலிருந்து, இயேசு ‘ மனுவுருவாகிறார்’ நம்மிடையே நம்மைவிட ‘ எளியவராக,’ ‘ தாழ்ச்சி மிக்கவராக,’ உருமாறுகிறார்: தந்தையிடமிருந்து, திருப்பணியாளரின் கரங்களில் ‘ மனுவுருவாகிறார். இச்சிந்தனையின் மூலம், மனுவுருவாதலுக்கும், அப்ப–இரச திருவுடல்–திரு இரத்த உருமாற்றத்திற்கும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துகிறார்.

ஒவ்வொரு திருப்பலியும் ‘ கிறிஸ்மஸ்’ ! இறைவன் ‘ மனுவுருவாகின்ற’ மகிழ்வூட்டும் நிகழ்வு! திருப்பலிக்கு இப்படியொரு புதிய கண்ணோட்டத்தை புனித பிரான்சிஸ் கொடுக்கிறார். ‘ கல்வாரியின் உயிர்த்தியாக அன்பைக்’ காட்டிலும், இறை தாழ்ச்சியின் உச்சமான ‘ பெத்லகேம்’ எளிமையே, மனித மீட்பின் காரணியாகிறது. உலகின் மேல் அன்புகொண்டே அதை மீட்க தன் மகனை உலகிற்கு அனுப்பினார். (யோவான் 3:16–17) இயேசுவின் மனுவுருவான பிறப்பின் இரகசியம் என்பது, இறைவனின் அளப்பரிய அன்பு.

இக்கருத்தை மேலும் விரிவுபடுத்தினார் பிரான்சிஸ்கன் இறையியலாளரான புனித இடன்ஸ்காட் என்பவர். “ ஆதிப் பெற்றோரின் பாவத்திலிருந்து மனிதர் மீட்கப்பட அல்ல, மனிதர் மேல் கொண்ட பேரன்பாலே, இறை ‘ மனுவுருவாதல்’ நிகழ்ந்தது. புனித பொனவொந்தூர் சொல்லுவார், “ இறை ‘ மனுவுருவாதலின்’ காரணம் பாவம் அல்ல, மாறாக, தன்னை தாழ்த்துகின்ற இறைவனின் அளப்பரிய பேரன்பே காரணமாகிறது. தன் தாழ்த்தலின் மூலம் மனிதரை உயர்த்தவே இயேசு மனுவுரு எடுத்தார்.” (பிலிப்பியர் 2:7) மனித மீட்புக்காக இறைவன் மனுவுரு எடுத்தது, ‘ மனிதப் பாவத்தின் நிமித்தமே’ என்பது எதிர்மறை சிந்தனை. அப்படி இல்லாமல், நேர்மறை எண்ணமாக, உலகின் மேல் கொண்ட அன்பால் கிறிஸ்து பிறப்பு நிகழ்ந்தது, என்பதை உணர்ந்து கொள்ளலாம். மீட்புக்காக மனுவுரு எடுத்தது, பாவச் சோகத்தின் வெளிப்பாடு அல்ல, அன்பின், மகிழ்ச்சியின் திருக்காட்சி.

1223–ல் கிரேச்சியோ முதல் குடில் நிகழ்வில் பிரான்சிஸ், பெத்லகேம் தீவனத் தொட்டியை திருப்பலிப் பீடமாக மாற்றுகிறார். இதை எடுத்துரைக்கும் போது, தாமஸ் சொலானோ எழுதுகிறார்: தீவனத்தொட்டியின் புல், வைக்கோல் விலங்குகளுக்கு உணவளித்து போஷித்தது. அதே சமயம் திருப்பலிப் பீடமாக, இயேசுவின் திருவுடல் திரு இரத்தத்தால் மனித ஆன்மாக்களை போஷிக்கிறது. “ மனிதரையும் விலங்கையும் காப்பவர் நீரே! கடவுளே, உமது பேரன்பு எத்துணை அருமையானது! (திருப்பாடல் 36:6–7)” புனித பிரான்சிஸ் தீவனத்தொட்டியே பலிப்பீடமாக கருதியது, இயேசுவின் மனுவுருவாதல், மனித மீட்பிற்கு மட்டுமல்ல, உலகின் அனைத்து உயிர்களின் மீட்புக்காகவே, என்ற உயரிய சூழலில் இறையியல் சிந்தனையாகவும் இன்றைய காலகட்டத்திற்கு மிகப் பொருத்தமாக உள்ளது.

எனவே, கிறிஸ்துவின் பிறப்பு, எளிமையில், தாழ்ச்சியில், தினந்தோறும் திருப்பலியில் நிகழ்கிறது. இறைவனின் தாழ்ச்சியையும், எளிமையையும், எடுத்துரைக்கிற பேரன்பே ‘ மனுவுருவாதல்’ நிகழ்வு. பாவமில்லை, அன்பே காரணமாகிறது. பெத்லேகேம் தீவனத்தொட்டியே திருப்பீடம்! மனுவுருவாதலே மீட்பின் செயல்! தாழ்ச்சியே, தியாக அன்பின் செயல்பாடு! கிறிஸ்து பிறப்பை தினமும் கொண்டாடுவோம்.

# திருவருகைக்காலத்தில் திருமுழுக்கு யோவான்

அம்புறோஸ் பீற்றர் மறையாசிரியர்.




**திரு**வருகைக் காலத்தில் புறம் தள்ளமுடியாத ஒரு கதாபாத்திரமாக திருமுழுக்கு யோவான் விளங்குகின்றார். மனித குல மீட்பின் வரலாற்றில் இயேசுவின் பிறப்பு எவ்வளவு முக்கியம் வாய்ந்ததோ, அதே போன்று இயேசுவின் பிறப்பிற்கு ஆறு மாதங்களுக்கு முன் பிறந்த யோவானின் பிறப்பும், தனிச்சிறப்பு வாய்ந்தது. இவர் இயேசுவின் வழியை, சீர் செய்ய வந்த செம்மல். நேர்மையும், துணிவும், நெஞ்சுறுதியும் இயேசு உலகின் மீட்பர் என்ற உறுதிப்பாடும் கொண்டவர். நற்செய்தியில் காணப்படும் கதாபாத்திரங்களில் மிகவும் வித்தியாசமான கதாபாத்திரம் திருமுழுக்கு யோவான் என்றால், அது மிகையல்ல.

இயேசுவின் முகம் சாந்தம் கொண்ட முகம். கருணையுள்ள கண்கள், நீண்ட தொங்கலாடை, பார்த்தாலே பரவசமான தோற்றம். ஆனால் திரு முழுக்கு யோவான் அப்படியல்ல. கரடு முரடான முகம், படியாத தலைமுடி, கண்கள் இரண்டும் நெருப்பு, நாக்கு தீப்பிழம்பு போல சுடும் தன்மை, உடுத்தியது ஒட்டக மயிராடை, உணவு காட்டுத்தேனும், வெட்டுக்கிளியும். ஆனால் அவர் வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகள் எல்லாம் கடும் வார்த்தைகளாக உள்ளன.

ஒரு கவிஞன் அழகாகச் சொல்லுவான்: கடவுள் ஒரு கணம் இடியென இடிக்கிறார். அடுத்த கணம் மழையை பொழிகிறார். கடவுளுக்கு இரண்டு முகம்: ஒன்று நீதிமுகம் அடுத்தது இரக்கமுகம். நீதிமுகத்தில் இடிக்கிறார் இரக்கமுகத்தில் பொழிகிறார். பொழியும்போது இனிக்கிறது. அவர் இடிக்கும்போது கசக்கிறது.

இதோ நான் இறங்கி வருவேன் என் மக்களை மீட்டு பாலும் தேனும் பொழியக் கானான் தேசத்திற்கு கொண்டு செல்வேன் என்று கடவுள் சொல்லும்போது இனிக்கிறது. "என் கட்டளைகளைக் கடைப்பிடித்து அதன்படி நடவுங்கள், இல்லையென்றால் என் கோபம் உங்களுக்கு எதிராக வரும் " என்று சொல்லும்போது கசக்கிறது. "நான் உன் ஆயன் உன்னை பசும் புல்வெளிக்கு அழைத்துச் செல்வேன், நீர் நிலையில் இளைப்பாற்றுவேன்" என்று கடவுள் சொல்லும் போது இனிக்கிறது. ஏழையை வஞ்சிக்காதே! ஆதரவின்றி இருப்பவர்களை நீதிமன்றத்தில் சிறுமைப்படுத்தாதே, அவர்களுக்காக நான் வாதாடுவேன் என்று கடவுள் சொன்னால் கசக்கிறது. " ஆறுதல் கூறுங்கள் என் மக்களுக்கு கனிமொழி கூறுவேன் என்று ஆண்டவர் கூறும்போது இனிக்கிறது. மரக்கல்லை சிறிதாக்கி, எடைக்கல்லை கனமாக்கி கள்ளத்தராசால் மோசடி செய்கிறீர்கள். வெள்ளிக் காசிற்கு ஏழைகளையும், இரு காலணிக்கு வறியவர்களையும் வாட்டுகிறீர்கள் எனக் குற்றம் சாட்டும் போது கசக்கிறது.

திருமுழுக்கு யோவானின் குரல் கடவுளின் இடிக்கும் இடி. அவர் கடவுளுடைய நீதிமுகத்தின் பிரதிபலிப்பு. அவர் பேச்சும் செயலும் சற்று கசக்கும் தான், கருத்துக் கூட கசக்கத்தான் செய்கிறது. அதற்காக அதைத் தூக்கியா எறிந்து விடுகின்றோம்? சாப்பிட்டு நம் நோயை குணமாக்கிக் கொள்கிறோம் அல்லவா, திருமுழுக்கு யோவானின் வார்த்தைகள் கூட ஒரு கசப்பு மருந்து அதை சாப்பிட்டு நம் நோயை குணமாக்கிக் கொள்வோம். ஏரோது அவரது தலையை வெட்டியதால் திருமுழுக்கு யோவான் இறந்து விடவில்லை. தலை தலைமுறையாய் இங்கு வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார். தப்பான ஒன்றை உலகமே சரி என்று சொன்னாலும், நீதிக்காக ஆங்காங்கே எழும்பும் சின்னச் சின்னக் குரல்களில், யோவான் ஒலித்துக் கொண்டு தான் இருக்கின்றார்.

திருமுழுக்கு யோவான் தனது போதனையில் முக்கியமாக வலியுறுத்தியது மனமாற்றம். மாற்றம் ஒன்றே மாறாத நிலைப்பாடு கொண்டது அது. நமது வாழ்விலும் உண்மையான மனமாற்றம் நிகழப்பட வேண்டும். திருமுழுக்கு யோவானைப் போல் நம்முடைய வாழ்விலும் இயேசுவின் நீதிநெறிகளாகிய அன்பு, இரக்கம், மன்னிப்பு, துன்பங்களை ஏற்றுக்கொள்ளுதல், பகைவர்களை அன்பு செய்தல், பகிர்தல் போன்றவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். திருவருகைக் காலத்தில் சிறப்பான விதத்தில் திருமுழுக்கு யோவானை சிந்திக்கும் நாம், வாழ்வது ஒரு முறை தான். அந்த வாழ்க்கையை மற்றவர்களுக்குப் பயனுள்ள விதத்தில் அமைத்து, கடவுளுக்கு என்றுமே சாட்சிகளாக வாழ்ந்திடுவோம்.

## கண்ணீர் பூக்கள்

**ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும்**
**அன்பே உமை மறப்பேனோ**
**காரிருள் சூழ்ந்த வேளையில்**
**பேரொளியாகி நின்றீரே**

**இனிமையென்பது இயல்பாகி**
**இசைதல் என்பது குணமாகி**
**எல்லா மக்களும் போற்றும்**
**நேச மகன் நீர் தானே**

**எதிரியென்பது எவருமில்லை**
**எட்டுத்திசையும் நண்பர்களே**
**மழலைகளின் பொய்கையில்**
**பூத்த செந்தாமரை நீரல்லவோ**

**மரணம் என்பது முடிவல்ல**
**நித்திய வாழ்வின் தொடக்கமே**
**இறைவனின் பாதத்தில்**
**இளைப்பாற வேண்டுகிறேன்**



அந்தோனிப்பிள்ளை
அருளானந்தம்
1962 - 2020

**மனைவி**
பெலிசியா
அந்தோனிப்பிள்ளை

16/10/2021 அன்று 11:00 மணிக்கு
பெல்வில் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.



# அனைத்து தூயவர்கள் கார்த்திகை - 01

## தூயவர்கள் யார்? தூயவர்கள் கடவுளா?

## தூயவர்களை நாம் வழிபடுகின்றோமா? வணங்குகின்றோமா?

அம்புறோஸ் பீற்றர் மறையாசிரியர்.

தூயவர்களிடம் நாம் மன்றாட வேண்டுமா?
நமது திரு அவை, தூயவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கின்றதா? இவ்வாறாக பிறசபைகளைச் சார்ந்தவர்களிடமிருந்தும் நம்முள் சிலரிடமிருந்தும் கேள்விகள் எழுகின்றன.

தூயவர்கள் என்பவர்கள், இவ்வுலகில் இறைவனுக்கு ஏற்புடையவர்களாக விசுவாசத்தில் உறுதி கொண்டு மற்றவர்களுக்கு இறைவனைக் காண்பித்து, இன்று விண்ணகவாழ்வை சுவைத்துக் கொண்டிருப்பவர்கள். தனக்காகவும் பிறருக்காகவும் வாழ்கிறவன்தான் மனிதன். பிறருக்காகவும் கடவுளுக்காகவும் மட்டும் வாழ்கிறவன் தூயவன்.

தூய பவுல் அடியார் எபிரேயருக்கு எழுதிய திருமுகம் 12 ஆம் அதிகாரத்தில் (12:22-23) இவ்வாறு எழுதுகின்றார். கடவுளின் நகர் விண்ணக எருசலேம். அதனைப் பல்லாயிரக்கணக்கான வானதூதர்கள் சூழ்ந்துள்ளனர் - விண்ணகத்தில் திரு அவை விழாக்கூட்டமென அங்கே கூடியுள்ளது. திருஅவையின் முதல் நூற்றாண்டுகளில் நினைவுகூரப்பட்ட தூயவர்கள் அனைவரும் வேதசாட்சிகளே. வேதசாட்சிகளைத் தவிர, ஏராளமான தூயவர்கள் விண்ணகத்தில் தூயவர்களாக பேரின்பப் பாக்கியம் அனுபவித்து வருகிறார்கள்.

தூயவர்களாக யாரும் பிறப்பதில்லை, மனிதர்களாகப் பிறந்து தூய நிலைக்குத் தம்மையே மாற்றிக் கொண்டவர்கள் தான் தூயவர்கள். இவர்கள் தங்கள் வாழ்வை இறைவனுக்காக அர்ப்பணித்து கிறிஸ்தவ விசுவாசத்தில் ஊன்றி நின்று, ஒரு எடுத்துக்காட்டான வாழ்வு வாழ்ந்தவர்கள். தூயவர்கள் தவறு செய்தவர்கள்தான், ஆனால் உணர்ந்து திருந்தியவர்கள். ஒரேயடியாக வீழ்ந்துவிடவில்லை, வீழ்ந்தாலும் எழுந்தவர்கள்.

கி.பி 153 ஆம் ஆண்டு பொலிக்கர்ப் என்பவர் மறைசாட்சி முடிபெற்றார். இதை வானகப்பிறப்பு நாளாக தொடக்கக் கிறிஸ்தவர்கள் கொண்டாடினர். பின்னர் பல பிரச்சனைகளுக்கு முற்றுப் புள்ளியாக கி.பி.387 ஆம் ஆண்டு நிசாயாவில் இரண்டாம் பொதுச்சங்கம் கூட்டப்பட்டது. இதில் தூய உருவங்களை நாம் பார்க்கும்போது, இவைகள் எந்த ஆட்களை குறிக்கின்றனவோ, அவர்களை நினைவுபடுத்துகின்றன என்றும், அவர்களை நினைத்துக் கொள்வதினால், அவர்களை பின்பற்ற முயலுகிறோம், அவர்களுக்கு வணக்கம் செலுத்துகிறோம் என்றும் விளக்கம் கொடுக்கப்பட்டது. இதன்பின் கி.பி 8ஆம் நூற்றாண்டிலேயே கார்த்திகை மாதம் 1ஆம் நாளில், சகல தூயவர்கள் பெருவிழாக் கொண்டாடப்பட்டது. குறிப்பாக பிரான்ஸ், பிரித்தானியா நாடுகளில் கி. பி. 9ஆம் நூற்றாண்டில் இத்திருவிழாவின் முக்கியத்தை உணர்ந்து ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் கொண்டாடப்பட்டது. கிபி. 10 ஆம் நூற்றாண்டில் உரோமையில் இத்திருவிழா, இரவுத் திருவிழிப்புடன் உபவாசமிருந்து கொண்டாடப்பட்டது. இவ்வாறாக திருஅவை வரலாற்றில் தூயவர்களின் பெருவிழா முக்கியத்துவம் பெற்றது

கடவள் முழுமையானவர் அனைத்தையும் படைத்தவர், அனைத்தையும் கடந்து உள் நிற்பவர். ஆனால் தூயவர்கள் கடவுள் இல்லை. அவர்களும் கடவுளால் படைக்கப்பட்ட. சாதாரண மனிதர்களே. தங்கள் வாழ்வால் தூய நிலைக்கு உயர்த்தப்பட்டவர்கள். அவர்கள் கடவுளோடு கொண்ட நெருங்கிய உறவால் அந்த முழுமையை நோக்கிப் பயணம் செய்தவர்கள். கடவுளுக்காக கடவுளின் திட்டப்படி இவ்வுலகில் வாழ்ந்தவர்கள், அதற்குப் பரிசாக கடவுளை முகமுகமாய்த் தரிசிக்கும் வரத்தைப் பெற்று விண்ணகத்தில் நமக்காக பரிந்து பேசுகின்றவர்கள். கிறிஸ்தவர்களாகிய நாமும் மனமாற்றமாக இருப்பதே சிறந்தது. தன்னை மாற்றிக் கொள்ளாத அல்லது மாற்ற மறுக்கின்ற எந்த ஒரு நபரையும் யாரும் திரும்பிப் பார்ப்பதில்லை.

ஓர் இலையுதிர்காலத்திற்குப் பின் தன்னைப் புதுப்பிக்காத மரத்தை, வனம் தன் எண்ணிக்கையில் வரவு வைப்பது கிடையாது. ஆற்று நீராலும், ஊற்று நீராலும், மழை நீராலும் தன்னைப் புதுப்பிக்காத நதியை மனிதன் நதி என்பதில்லை. மாற்றம் என்பது காலத்தின் கட்டுப்பாடு. அது மரத்திற்கு மட்டுமல்ல, மாறாக ஒவ்வொரு மனிதருக்கும் பொருந்தும். மாற்றம் என்பது மிகவும் அவசியம். குறிப்பாக தன் பாவவாழ்வில் இருந்து புண்ணிய வாழ்வுக்கு மாறுவது அவசியம் என திருமுழுக்கு யோவான் பறைசாற்றுகிறார். மனமாற்றத்தை வலியுறுத்தும் திருமுழுக்கு யோவான் திருவருகைக்காலத்தில் நினைவு கூரப்படுகின்றார். நமக்குள் மனமாற்றம் நிகழாதவரை இயேசுவின் இரண்டாவது வருகையை நாம் ஒரு போதும் சுவைக்க முடியாது.

# இறை இரக்கம்



திருமதி: லதா ரூபன்

இறைவனுடைய இரக்கம் எப்போதும் எல்லோர் மட்டிலும் உண்டு என்பதே அனைவரின் நம்பிக்கையாகும். இதனை இன்னும் வலுப்படுத்த, உறுதிப்படுத்த பக்தர்களால் மேற்கொள்ளப்படும் ஒரு பக்தி முயற்சியே, **இறை இரக்கப் பக்தி** ஆகும். உலக ஆரம்பத் தொடக்கத்திலிருந்தே இறைவன் மக்கள் மீது கொண்டுள்ள இரக்கத்தை வெளிப்படுத்தி வந்துள்ளார். பழைய ஏற்பாட்டு வரலாற்று நிகழ்ச்சிகள் மூலமும் புதிய ஏற்பாட்டில் இயேசுவின் மூலமும் இறைவனின் இரக்கம் வெளிப்படுகின்றது.

ஆண்டவரை அன்பு செய்கிறவர்களுக்கு அவரது இரக்கம் தலைமுறை தலை முறையாய் உள்ளதென்று தேவதாய் தனது கீதத்தில் கூறுகின்றதை நாம் அவதானிக்கலாம். அண்மைக்காலத்தில் விசுவாசிகளுக்கு, பாவிகளுக்கு தமது நித்திய அன்பில் புதுத்தன்மைகளை அறிவித்து அதன் மூலம் இறை இரக்கத்தினை விளங்கிக் கொள்ள, இறை இரக்கப் பக்தியை ஏற்படுத்த நமதாண்டவர் பல அடியாருக்கு காட்சி தந்துள்ளமையை நாம் அறிவோம். இவ்வாறான முதல் பாக்கியத்தைப் பெற்றவர்கள்

**தெரேசாள் இறப்பு 1891**

**சகோதரி பெனினா கொண்சலேட்டா இறப்பு 1916**

**சகோதரி சோபியா மெனாண்டஸ் இறப்பு 1923**

இப் புனித பக்தியைப் பரப்பும் பணி சகோ. பவுஸ்தீனா என்பவரிடம் அறிவிக்கப்பட்டது என்று அறிகின்றோம். இரக்கத்தின் அரசரான நமதாண்டவர் இயேசு இவவிற்கு 1930ம் ஆண்டிலிருந்து 1938 வரை பலமுறை காட்சிகள் கொடுத்ததோடு, பல அறிவுரைகளையும் கூறியுள்ளார். இவ் அறிவுரைகள் பல அவவின் நாட்குறிப்பில் எழுதப்பட்டும் உள்ளது. பாவிகள் சீரகேடு எவ்வளவு அதிகமோ, அவ்வளவிற்கு இரக்கத்தைப் பெறும் உரிமையும் அதிகமாய் உள்ளது.

"ஆழம் காண முடியாத எனது இரக்கத்தில் நம்பிக்கை வைக்க, எல்லா ஆன்மாக்களுக்கும் அழைப்பு விடு. ஏனெனில் எல்லோரையும் மீட்க நான் விரும்புகிறேன். எல்லா ஆன்மாக்களுக்காகவும் சிலுவை மரத்தில் ஈட்டியால் குத்தித் திறக்கப்பட்டுள்ளது எனது இரத்தத்தின் ஊற்று, நான் யாரையும் ஒதுக்கி விடுவதில்லை " இப்படி வலியுறுத்துகிறது – இறை இரக்கம்.

பவுஸ்தினா கொவால்ஸ்கர் இவவின் புனித பட்டத்திற்கு பொறுப்பாக அருட்தந்தை– செரபிம் மைக்கலன்கோ பணியாற்றி, திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் புனிதர் பட்டம் வழங்கினார்.

**இவரைப்பற்றிய சில தகவல்கள்**

⇒ போலந் நாட்டில் **Gloglowiec** எனும் கிராமத்தில் 1905 ம் ஆண்டு ஆவணி 25 ம் திகதி பிறந்தார். இவருக்கு **Helan kowalska** எனும் நாமம் சூட்டப்பட்டது.

⇒ 1912 ம் ஆண்டில் இவர் இயேசுவின்பால் ஈர்க்கப்பட்டு, இறைபணி செய்யும் ஆர்வம் ஏற்பட்டது.

⇒ 1925 ஆனி 19 ம் திகதி அங்கு நடைபெற்ற "நற்கருணைத் திருவிழா" அன்று இறைவனுக்கு நித்திய அர்ப்பணம் செய்து கொண்டார்

⇒ 1925 ஆவணி 1ம் தேதி திரு இரக்க கன்னியர் சபையில் ஒரு அருட்செல்வியாக அங்கீகரிக்கப்பட்டு, பின்னர் மேல்படிப்பிற்காக **Warsaw Krakow** போன்ற நகர்களுக்குச் சென்று தன் பயிற்சிகளை முடித்துள்ளார்.

⇒ 1926 ஏப்பிரல் 30 தன் ஆரம்பப் பயிற்சிகளை முடித்துக்கொண்டு பின் அவவிற்கு **Maria Faustina** எனும் நாமம் சூட்டப்பட்டது. – 1931 – மாசி 22 ம் திகதி யேசு இவவுக்கு காட்சி கொடுத்துள்ளார். தூய வெண்ணிற ஆடையும், நெஞ்சருகில் சிகப்பு மங்கல் **(Red and pale)** நிறங்கள் தெரிந்ததாகவும் "**Jesus I Trust in you**" என்று வரையப்பட்டுள்ளதாகவும் இருக்கின்றது.

⇒ 1934 தை 2 ம் திகதி அருட்பணி **Sopocko** வின் பெரும் உதவியுடன் பிரபல சித்திர கலைஞர் **Eugene Kazimierowks** அவர்களிடம், தான் கண்ட காட்சியை தத்ரூபமாக வரைந்து தரும்படி கோரியுள்ளார்.

⇒ 1934 ஆனி பிரபல கலைஞரால் பலமுறை வரையப்பட்ட சித்திரங்கள் அருட்செல்வி **Faustina** வால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இறைவனிடம் கண்ணீர் விட்டு அழுது முறையிட்டிருக்கின்றார். உம்மைப்போல் அழகான படம் யாரால் வரையமுடியும்? என்று இறைவனிடம் அழுது வேண்டியுள்ளார். அன்று அவ கேட்ட அசரீரி வார்த்தைகள்

**"Not in the beauty of the color not of the brush lies the greatness of this image but in my grace"**

அருட் செல்வியின் தினக்குறிப்பு – 313 பின்னர் வரையப்பட்ட சித்திரம் அருட்பணி **Sopocko** அதிபராக பணியாற்றும் **st.Bernardine Sister's convent** மடத்தில் இருக்கின்றது. {மிகுதி மறு இதழில்.....}

# புதைந்திருந்து புதுமை செய்யும்

## மைக்கல் டிமெல்லோ சுவாமியின் புதுமைகள்

எண்ணில் அடங்கா புனிதர்களைக் கொண்ட பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் எனக்கு, புதைந்து கொண்டே புதுமை கொண்டிருக்கும் புனிதர் ஆகாத ஒரு புனிதரைப் பற்றி கூற ஆசைப்படுவதோடு, கடமையும் பட்டுள்ளேன்.

இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டதில், இலங்கையின் மிக நீளமான ஆறான, மகாவலிகங்கை, மலைகள், சமவெளிகளெல்லாம் ஓடி, மீதமுள்ள நீரை கொண்டு வந்து கலப்பது எம் ஊரில் தான். பழைய காலத்தில் கொட்டியாபுரம் என்று அழைக்கப்பட்டு, தற்போது மூதூர் என்று அழைக்கப்படுகின்றது. போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்று பிற நாட்டவர் மாறி மாறி வந்து ஆட்சி செலுத்திய வேளைகளில், றொபேட் நொக்ஸ் என்ற போர்த்துக்கேய வீரரை ஒல்லாந்தர் பிடித்த வரலாற்று ஞாபகமும் இவ்வுரில் உண்டு, புளியமரப் போறை ஒன்றில் இருந்துதான் பிடிபட்டார். அந்த மரஞாபகமாக புதுப்புளியமரம் வைக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றது

இதைவிட ஒரு கத்தோலிக்க ஆலயம் (புனித அந்தோனியார்) ஒரு மெதடிஸ் ஆலயம், இரண்டு இந்து கோவில், ஒருவிகாரை, பல பள்ளிவாசல்களும் கொண்டதுதான் மூதூர். இங்கு வாழ்ந்த கத்தோலிக்கர்கள் மிகவும் பழமையானவர்கள். இதற்கு அடையாளம் தான் நான் கூற இருக்கும் புனிதமான மனிதர் மைக்கல் டிமெல்லோ சுவாமி. இவர் ஒரு குருவானவர். எமது நாட்டின் புனிதரான புனித யோசேவாஸ் அடிகளாருடன் வாழ்ந்தவர். மூதூரில் பல நாட்கள் வாழவில்லை என்று சொல்லுகின்றார்கள். ஒரு நாள் வந்து அன்று மாலை திருப்பலி ஒப்புக் கொடுத்திருக்கின்றார். அன்று இரவே அவருக்கு வயிற்றில் வலி ஏற்பட்டு இருக்கின்றது. இரவு முழுவதும் வலியால் வேதனைப்பட்டு கையில் சிலுவையுடன் கட்டிலிலும் படுக்காமல் வெறும் தரையிலேயே படுத்து இறைவனிடம் செபம் செய்து கொண்டே அடுத்த நாள் புனித யோசேவாஸ் மடியில்தான் உயிர்விட்டு இருக்கின்றார். அவர் இறுதியாக வைத்த திருப்பலியில் இறப்புப் பற்றியே உரையாற்றியுள்ளதாக கேள்விப்பட்டதுண்டு.

இவரை அடையாளம் காட்ட ஒரு கல்லறைதான் உண்டு. இவரின் உருவப்படம் எதுவும் இல்லை. டிமெல்லோ பெயரில் ஒரு வசதியற்ற மாணவருக்கான விடுதி ஒன்று உள்ளது. அருள் சகோதரிகள் தான் அதை நடத்துகின்றனர். (**Dimello Home**) மைக்கல் டிமெல்லோ சுவாமி என் வாழ்வில் செய்த அற்புதங்களை நீங்களும் அறியவும், இறைவனைப் பின் பற்றி அவருடைய நியமங்களின்படியும், கட்டளைப்படியும் நடந்தவர் வழியாக இன்றும் எம்முடன் இறைவன் இருக்கின்றார், இன்னும் இருப்பார் என்பதை சாட்சியாகக் கூறுவதுடன், மறைந்துள்ளதை வெளிப்படுத்தவும் விரும்புகின்றேன்.

நான் ஆசிரியையாக எங்கள் ஊரில் கடமையாற்றியபோது 2001 ஆண்டுகாலப் பகுதியில் காலையில் பாடசாலை செல்லும்போது தெருவில் இன்னுமொரு ஆசிரியரைச் சந்திப்பேன். பிறமதத்தவர், என்னைக் கண்டால் அவவும், அவவைக் கண்டால் நானும் நடையைக் குறைத்து, இருவரும் ஒன்றாக கதைத்துக் கொண்டு செல்வோம். அந்த ஆசிரியை மூலம் நான் கேட்ட செய்தி என்னை மேல் சிலுக்க வைத்தது. அவருடைய கணவருடைய (கண்ணாடி பிரேம் போடும் கடை) டி மெல்லோ சுவாமியுடைய கல்லறையுள்ள தெரு ஓரத்தில் தான் வைத்திருந்தார். அதுதான் இந்த ஆசிரியையுடைய வீடுமாக இருந்தது. இரவில் நாங்கள் வெளியில் வந்தால், நிலவு இல்லாத இருளான நாட்களில் டிமெல்லோ சுவாமி கல்லறை இருக்கும் வளவில் பெரிய ஒளி தெரிவதாகவும், இதமான பாடலும் முணுமுணுப்பும் (செபம்) கேட்பதாகவும் கூறினார். எனக்கு ஆச்சரியமாகவும் பிற மதத்தவரான இவருக்கு அறியும் அளவுக்கு இந்த அற்புதம் நடந்துள்ளதே என்றும் (இதை நான் என் பூட்டி வாயிலாக கேள்விப்பட்டதுண்டு) அதே பேச்சை நிறைய காலம் சென்ற பின் கூறுகின்றாரே என்று ஆச்சரியமாகவும் அற்புதமாகவும் இருந்தது

என் வாழ்வில் மைக்கல் டிமெல்லோ சுவாமி செய்த அற்புதங்களைச் சொல்லுகிறேன். பிரச்சனைக் காலங்களில் நாங்கள் வீட்டில் இருந்தது குறைவு. காரணம் அடிக்கடி வீடு உடைப்பார்கள். பொருட்களை நாசப்படுத்துவார்கள், எரிப்பார்கள். இப்படியாக வீட்டில் இருக்கவே மாட்டோம். புனித அந்தோனியார் ஆலயத்தில் தான் எல்லா ஊர்மக்களும் இருப்போம். அவரே தஞ்சம், 1988–1991 காலப்பகுதியில், எங்கள் வீட்டில் இந்திய இராணுவத்தினர் இருந்தனர். அவர்கள் விட்டுச் சென்ற பின்னர், எங்கள் வீட்டுக்கு போயிருந்தோம். எங்கள் கிணற்று நீர் உப்பாக இருந்தது. முன்னர் ஒரு போதும் உப்பு இருக்கவில்லை. எங்களுக்கு பெரிய கஸ்ரமாகி விட்டது. இப்போது தான் குழாய்நீர் குடிநீர் வசதி உள்ளது. முன்னர் இவ்வாறு இல்லை. கிணற்று நீர் தான் குடிநீராக எல்லாத் தேவைகளுக்கும் பயன்பட்டது. எல்லாருக்கும் கவலை, கிணற்றுநீர் உப்பாகி விட்டதென்று. முன்னர் எங்கள் சுற்றாடலிலுள்ளவர்கள் பலரும், எங்கள் வீட்டில் தான் தண்ணீர் எடுக்க வருவார்கள். விஞ்ஞான ரீதியாக பார்த்தால் கடலுக்கு அருகில் உள்ள கிணறுகள் சில காலங்களில் ஊற்றுக்குள் உவர் நீர் கலந்து உப்பாவது உண்டு. பின்பு சரி வந்து விடும் என்று படித்ததண்டு, ஆனால் பல நாட்கள் ஆகியும் தண்ணீர் மாறவில்லை. தேற்றாமரக்கட்டை போட்டால் நன்னீர் ஆகிவிடும் என்று கேள்விப்பட்டு யாரிடமோ சொல்லி அப்பா தேற்றாக்கட்டை பெரியதுண்டு ஒன்றைக் கொண்டுவந்து போட்டார். அப்பவும் சரி வரவில்லை, என் அம்மா மைக்கல் டிமெல்லோ சுவாமியின் புதுமைகளை அறிந்தவர். ஒரு நாள் மாலை வேளை டிமெல்லோ சுவாமியின் கல்லறை மண் கொண்டு வந்து தூவினார். புதுமையிலும் புதுமை அடுத்த நாள் எங்கள் கிணற்று நீர் நல்ல நீராகி விட்டது. இன்றுவரை அது உப்பாகவில்லை, சந்தோஷப்பட்டோம், நன்றி கூறினோம். எனக்கு அம்மா செய்ததைத்தான் நினைக்க நினைக்க வியப்பாக இருந்தது.

அப்பொழுது தான் அம்மா எனக்கு கூறினார். நான் பிறக்கும் போது மிகவும் வேதனைப்பட்டாவாம், வைத்தியசாலை செல்லவில்லையாம். வீட்டில்தான் என்னைப் பெற்றெடுத்துள்ளார். அதுவும் நான் வழமையான குழந்தைகளைவிட விதிவிலக்கு, காலால் பிறந்த குழந்தை என்பார்களே! அவ்வேளையும் என் பூட்டி டிமெல்லோ சுவாமியுடைய மண்ணை எடுத்து பாத்திரத்தில் இட்டுக் கலக்கி, அந்த நீரை தெளிய வைத்து, குடிக்க கொடுத்திருந்தாவாம். அதன் பின்தான் இதை எழுதும் நான் சுகமாகப் பிறந்தேன். இவை எங்கள் குடும்பத்தில் நடந்தவை. இதைவிட பல குடும்பங்களிலும் பல புதுமைகள் செய்துள்ளார், செய்து கொண்டு இருக்கின்றார்.

பாரீஸ்க்கு வந்த பிறகு நடந்த ஒரு புதுமை. பைபிளில் பெரும்பாடு உள்ள ஒரு பெண் ஆண்டவருடைய ஆடையைத் தொட்டு குணம் பெற்றார் என்று அறிந்துள்ளோம். நானும் இப்படியான துன்பத்துக்கு ஆளானேன். பல வருடங்களாக துன்பப்பட்டேன். இரத்தப் பரிசோதனை செய்யும் இடத்தில் இருந்தே Doctorக்கு அழைப்பு விடுத்து என்னை அவசரசிகிச்சைப் பிரிவில் சேர்க்கும்படி போன் செய்வார்கள். நான்கு முறை அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளேன். இவ்வாறான ஒருநிலையில் சாகப் போகின்றேன் என்று நினைத்து விட்டேன். திடீர் என்று அதிகாலை 3 மணியளவில் டிமெல்லோ சுவாமியின் நினைவு வந்தது என்பதை விட, நினைக்கப் பண்ணினார். அந்த நிமிடமே டிமெல்லோ சுவாமியிடம் சொல்லி அழுதேன். விடிந்து கொண்டு வரும்போதே என் உடல் நிலை சரியாகிக் கொண்டு வந்ததை உணர்ந்தேன். இதுவும் என் வாழ்வில் நடந்த பெரிய புதுமையாக உணர்ந்தேன்.. என் வேதனைகளிலும், சோதனைகளிலும் அவரை வேண்டும்படி தோன்றுகின்றது.

இதைவிட நான் (Paris) பரிசில் இருந்து ஊருக்கு செல்லும்போதெல்லாம் இலங்கைக்கு சூறாவளி மழை கிடைக்கும் மாதங்களான ஐப்பசி, கார்த்திகை மார்கழி October, Novermber, December) யில் வங்காளவிரி குடாவில் தாளமுக்கம் உருவாகும். பெருமழை, காற்று எல்லாம் வீசும். செய்திகளிலும் கேட்போம், அவை நடக்கும். நான் டிமெல்லோ சுவாமியே! எங்களையும் எங்கள் ஊர் மக்களையும் காப்பாற்றுங்கள், இறைவனிடம் மன்றாடுங்கள்'' என்று வேண்டுவேன். எல்லாம் வாறமாதிரி வந்து போய்விடும். நன்றி டிமெல்போ சுவாமி ஊடாக நன்றி.

தற்போது மூதுரரில் உள்ள குருக்கள் (அருள்பணியாளர்கள்) இந்தியாவைச் சேர்ந்தவர்கள். அவர்களின் சபை கப்புச்சீனு. மிகவும் பக்தியாக வழிபாடுகள் எல்லாம் செய்வார்கள். ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமைகளில் மாலைத் திருப்பலி டிமெல்லோ சுவாமியின் கல்லறையுள்ள வளவில்தான் நடை பெறுகின்றது. 2017 ஆம் ஆண்டில் ஆறு மாதங்கள் நிற்க வேண்டிய சந்தர்ப்பம் கிடைத்ததால் திருப்பலிக்கு போவேன்.

ஒரு வியாழன் பூசை முடிந்து வெளியில் வரும்போது எங்கள் உறவுக்காரப் பையன் குவைற்றில் வேலைக்கு சென்றிருந்தவர். அவர் வாகன விபத்தில் காயப்பட்டு கடுமையான நிலையில் (கோமா) வைத்தியசாலையில் இருப்பதாகவும், அவருடன் சென்ற வேறு நாட்டுப் பையன் இறந்துள்ளதாகவும் செய்தி வந்தது. அந்த நிமிடமே மீண்டும் கல்லறைக்குச் இன்று டிமெல்லோ சுவாமியிடம் மன்றாடினோம். இயேசுவிடம் அவருக்காக மன்றாடி சுகம் தாருங்கள் என்று என்னைப் போல பலரும் வேண்டினார்கள்.

அடுத்த நாளே கேள்விப்பட்டோம், அவருடைய உறவு முறையான பிள்ளையும் அந்நாட்டில் வேலை பார்த்து இருக்கின்றார். உடனே அவ அவ்விடம் சென்று அவங்க கூட இருந்து உதவிபுரிந்து உடனுக்குடன் செய்தியும் தெரிவித்தார். பின்னர் அவர் நலமுடன் வீடு திரும்பி எல்லாருக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளார். டிமெல்லோ சுவாமி ஊடாக நன்றி இறைவனுக்கே!

மைக்கல் டிமெல்லோ சுவாமி பற்றிய ஒரு சிறிய புத்தகத்தை மூதூரைச் சேர்ந்த அருட்தந்தை சீ.நோ. ஜெயரட்ணம் அடிகளார் எழுதியுள்ளார். புத்தகத்தின் தலைப்பு ' மறக்கப்பட்ட மகான்'' இப்படியாக புதைந்திருந்து புதுமை செய்து கொண்டிருக்கும் மைக்கல் டிமெல்லோ சுவாமி, இறைவன் விருப்பப்படி வாழ்ந்து அவருடைய அருளின் உதவியினால் அவரைத் தேடுவோருக்கு புதுமைகள் பல செய்து கொண்டு இருக்கின்றார்.

தற்போது பரவும் கோவிட் 19 தொற்றிலும் இருந்து எமது ஊர்மக்களையும் காப்பாற்றவேண்டும். எல்லோரையும் இறைவனிடம் பரிந்து பேசி காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையுடன் இறைவனை வேண்டி அவர் வழி செல்ல அவர் விருப்பம் போல் வாழ்வோம். இறைவனுடைய வழியைக் கண்டடைவோம். தேவதாயையும் இவ்விடம் மறக்கவில்லை. அவருடைய புதுமைகளையும், அற்புதங்களையும் இன்னும் ஒரு கட்டுரையில் எழுதலாம் என்று இருக்கிறேன்.......

**திருமதி: மெடோனா ஜீவிதமலர் - பாரீஸ் - 20**

# மறைக்கல்வியின் முக்கியத்துவம்



விவிலியத்தின் முக்கியத்துவத்தையும் அதன் கோட்பாடுகளையும் தெளிவாக விளங்கிக் கொண்டு, அவற்றை எவ்வாறு பின்பற்றி வாழ வேண்டும் என்பதை மறைக்கல்வி கற்பித்து நிற்கின்றது. இன்றைய நவீனத்துவ வாழ்வின் ஓட்டத்திலும், இரு வேறு கலாச்சாரப் பண்பாட்டுக் கலப்பிலும், இளையோர் சமூகம் சிக்கித்தவிக்கிறது.

இதிலிருந்து மீண்டெழுவதற்கு ஒரே வழி, அவர்களிடத்தில் இறை நம்பிக்கையையும், விசுவாசத்தையும் ஆழப்படுத்த வேண்டும். இதற்கு மறைக்கல்விதான் துணை செய்கிறது. அருட்சாதனங்களைப் பெறுவதற்காக மட்டுமல்லாமல், அவர்களை உண்மை, நீதி, பிறரன்புப் பணி எனும் உயரிய விழுமியங்களை வாழ்வில் செயற்படுத்த வழிகாட்டுகிறது. ஆகவே மறைக்கல்வியின் முக்கியத்துவதை உணரச் செய்து, மனமுவந்து கற்க ஊக்கமளிப்போம்.

**வி. அ.தயாளினி**

# புனித நிக்கோலார் (மார்கழி 6)



தென்கிழக்கு துருக்கிப்பட்டணமான பற்றாரா எனும் லீசியப்பிரிவில் பிரபு குடும்பத்தில் பிறந்தார். பல காலம் பிள்ளைப்பாக்கியம் இல்லாமல் இருந்த எப்பிபாலியுஸ், யுவான்னா தம்பதியினருக்கு பல காலத்தின் பின் இறைவன் அருளால் பிறந்தார். ஆரம்பத்தில் இப் பெற்றோருக்கு பிள்ளைகள் இல்லாதபடியால் அங்கிருந்த ஏழைப்பிள்ளைகளை ஞானப்பிள்ளைகளாக வளர்த்து வந்தார்கள். நிக்கோலா குழந்தைப்பருவத்திலே இறைவன்பால் ஈர்க்கப்பட்டு புதன், வெள்ளி நாட்களில் ஒரு சந்தி பிடித்தாற்போல் தாய்ப்பால் அருந்துவார். இதைக்கண்டு பலர் ஆச்சரியப்பட்டார்கள். இவருக்கு 13வயது நடக்கும்போது பற்றாராவில் வாந்திபேதி நோய் ஏற்பட்டு பெற்றோர் இறந்தனர். பின்னர் சிறிய தகப்பனான பற்றாரா ஆயருடன் வாழ்ந்து வந்தார். அந்நாட்களில் பெற்றோரின் செல்வங்கள், பொருட்களை வறுமையால் வாடும் மக்களுக்கு அன்பளிப்பாகக் கொடுப்பார். ஒருமுறை திருமணமாகாத மூன்று பெண்கள் உள்ள குடும்பத்தினருக்கு, மணம் முடிக்க தகுந்த ஆண்கள் இல்லாமல் பணம் இல்லாதபடியால் தடைப்பட்ட போதிலும் நிக்கொலார் இதை அறிந்து இரவு நேரத்தில் இரகசியமாக பணம் நகைகளை யன்னல் வழியாகப் போட்டு வந்தார். இப்படியாக மூன்று பெண்களுக்கும் செய்து சீராகவும், சிறப்பாகவும் வாழ உதவியுள்ளார்.

கிறிஸ்மஸ், நத்தார் காலங்களில் ஏழைகளுக்கு பொருளுதவி புரிவதும், பற்பல உதவிகளும் செய்துள்ளார். சிறிய தந்தையான ஆயரின் வழிநடத்தலில் இறையியல் கற்று திருமுழுக்கு, திருமணம், மரணச்சடங்கு, நோயாளரைச் சந்தித்தல் போன்ற நற்பணிகள் புரிந்து, பத்தொன்பதாம் வயதில் திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் இயேசுவின் பால் ஈர்க்கப்பட்டு, ஜெருசலேம் போய் வரும் வழியில் கடலில் பெரும் புயல், இடிமுழக்கம், கொந்தளிப்பு ஏற்படப்போவதை உணர்ந்து கப்பல் தலைவனுக்கு கூறியுள்ளார். அவர்கள் அனைவரும் செய்வதறியாது திகைத்து நிற்க அனைவரையும் ஒன்று சேர்த்து இறைவனை வேண்டியபோது, புயல் கலைந்து அமைதி பெற்றது. மாலுமிகள் அனைவரும் நிக்கொலார் செய்த செயலைப் புகழ்ந்து நன்றி கூறினர்.

புனித நிக்கோலார் – விவாகமாகாத பெண்களின் பாதுகாவலர். கடலில் பயணம் செய்வோர் பாதுகாவலர். சிறு பிள்ளைகளின் பாதுகாவலர் – சிறைப்பட்டோரின் பாதுகாவலர். இப்படியாகப் பல முகங்களைக் கொண்டு விளங்கினார்.

கிறிஸ்மஸ் என்றால் சாந்தா குளோஸ் என்று சிறுபிள்ளைகட்கு அன்பளிப்பு வழங்கும் பெருமையுள்ளவர். இவரைப்பற்றிய பெருமைகள் இன்னும் அதிகம் உண்டு. ஏழை எளியவர்களுக்காக சீவித்தவர். தனக்கு மரணம் சம்பவிக்கப் போகின்றது என்பதை அறிந்து, இறைவனை புகழ்ந்து சங்கீதம் பாட தூய வெண்ணிற ஆடை அணிந்த இளைஞரையொத்த தேவதாதர்கள் புடைசூழ, அமைதியுடன் மீராப் பட்டணத்தில் கி.பி 343 மார்கழி 6ம் தேதி மரணத்தைத் தழுவிக்கொண்டார். இறந்தபின் அவரின் சரீரத்தில் இருந்து வடிந்த மதுரமுள்ள இரசத்தின் மூலம் பல நோயாளிகள் குணமடைந்தனர். இவரது உடல் பாப்பரசர் ஊர்பான் என்பவரால் புனிதமாக்கப்பட்டு இத்தாலியில் "பாரி" எனும் இடத்தில் வைகாசி 31ம் தேதி கொண்டு வரப்பட்டது.

இவரின் உடலில் இருந்து "மதுரமுள்ள இரசம்" பாரி நகரில் இருந்து அருட்பணி S.E. நீக்கலஸ் குணசீலன் அடிகளாரால் யாழ் கொண்டுவரப்பட்டு மிருசுவில் புனித நிக்கொலார் ஆலயத்தில் புனித பேழையில் வழிபாட்டிற்காக பாதுகாப்புடன் வைக்கப்பட்டுளாளது.

# புனித சில்வேஸ்டர். (கி.பி 335) (மார்கழி 31)



இவர் ரோமையில் பிறந்தவர். இவரின் தாயின் உதவியால் மிகவும் பக்தி உணர்வுடன் வளர்க்கப்பட்டார். திறமை வாய்ந்த குருவின் பொறுப்பில் இவர் வாழ்ந்து வந்தார். அத்துடன் தன் ஆன்மீக வாழ்விலும் திடம்பெற்று, அந்நேரம் பாப்புவாயிருந்த புனித மார்சலினுஸ் கையால் குருப்பட்டம் பெற்றார். அக்காலத்தில் தியாக்கினேசியன் அரசன் வேதகலாபனை தொடங்கும் காலமாய் இருந்தது. திருச்சபையின் துன்பம் நிறைந்த நாட்களையும் தியாக்கினேசியன், மாக்சிமியன் இவர்கள் ஆட்சி துறந்ததையும் இவர் கண்டார். இரு ஆண்டுகளுக்குப் பின் புனித மெல்கியாதெஸ் எனும் பாப்பு இறந்ததும் இவர் பாப்புவானார். ஆர்லஸ் நகரில் நடந்த சங்கத்துக்கு நான்கு பிரதிநிதிகளை அனுப்பினார். சில பிரிவினைச்சபைகள் அதில் கண்டிக்கப்பட்டனர். சங்கத்தின் முடிவை இவர் ஏற்று அங்கீகரித்து இறை மக்களுக்கு அறிவித்தார். பின்னர் திசேயார் நகரில் இவரது ஆட்சியின்போது பொதுச்சங்கத்திற்கு வயதாகி விட்டதினால் போக முடியவில்லை. பிரதிநிதிகளை அனுப்பி வைத்தார். அந்தியோக்கியாயிதாப்பியா, அலெக்சாந்திரியா பிதாப்பிதா இவர்களை விட, முதல் இடம்பெற்று சங்கத்தை திறம்பட நடாத்தினார்கள். புனித சில்வெஸ்டர் 24 ஆண்டுகள் 11 மாதங்கள் திருச்சபையை நல்வழியில் நடாத்தி 335 ம் ஆண்டில் இறந்தார். இவரின் திருநாள் ஒவ்வொரு வருடமும் மார்கழி 31ம் தேதி நினைவு கூரப்படுகிறது.










நான் டொறியா தியோனிஸ். தமிழ்ப்படிக்கி
றேன். நன்கு. எழுத மாட் டேன். French
நன்கு பேசுவேன். French கதைப் புத்தகங்
கள் வாசிப்பேன். கோவிலுக்குப்
போவோம். பூசை செபமாலை சொல்லு
வோம். அப்பா அம்மா தமிழ் சொல்லித்
தருவார்கள். நான் பியானோவும்
வாசிப்பேன். எல்லோரையும். பார்க்க
ஆசை. எல்லோரும் சுகமாய் இருங்கள்
நன்றி

Doria


நான் டினோறா தியோனிஸ். 12 வயது. அம்மா
பெயர் லதா. நன்கு வீணை வாசிப்பா. நானும்
பழகிறேன். அக்கா பெயர் டியோன். நான் COLLEGE
போகின்றேன். நன்கு FRENCH பேசி கதைப்பேன்.
தமிழ் படிக்கிறேன். கோவிலுக்கு போவோம். பூசை
செபமாலை சொல்லுவோம். தமிழ் அரியாத
எழுத மாட் டேன். FRENCH புத்தகங்கள் வாசிப்
பேன். நன்கு படங்கள் கீறுவேன். எல்லாரும்
நன்கு இருங்கள்.
நன்றி

Dinorah







**சின்னக் கரங்களே!**

**இப்பகுதியை அலங்கரிக்க உங்கள் கையால் வரைந்த வண்ணச் சித்திரங்களை எதிர்பார்க்கின்றோம். எனவே தயங்காமல் உங்கள் சித்திரங்களை எமக்கு அனுப்ப மறவாதீர்கள்……**







எனது பெயர் ஆருதி
எனது அப்பாவின் பெயர் குணலிங்கம்
எனது அம்மாவின் பெயர் புஸ்பராணி
எனது அண்ணாவின் பெயர் அட்சயன்
எனது வயது பதினைந்து
நான் தமிழ் சோலையில், ஒன்பதாம்
ஆண்டு படிக்கின்றேன்
தமிழ் எனக்கு மிகவும் பிடித்தமான பாடம்


எனது பெயர் ரவிஷா. வயது : 13
என்னுடைய அப்பாவின் பெயர் ரவி.
அம்மாவின் பெயர் தாரணி.
எனக்கு அண்ணாவும், தங்கையும் இருக்கிறார்கள்.
அவர்களின் தருண், தாரவி.
நான் collège யில் படிக்கின்றேன்.
நான் தமிழ் வகுப்பிற்கும், வயலின்
வகுப்பிற்கும் போகின்றேன்.
எனக்குப் படங்கள் வரைவது விருப்பம்.


வணக்கம்,
என் பெயர் குளோரியே மரிய கொன்சன்றைமின். எனக்கு 13 வயது. என் தாய் மொழி தமிழ். எனக்கு ஒரு அக்காவும் அண்ணாவும் இருக்கின்றனர். எனது அக்காவுக்கு 19 வயது, அவள் 2 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்தில் படிக்கிறாள். எனது அண்ணாவுக்கு 17 வயது, அவர் 3 ஆம் ஆண்டு Lycée யில் படிக்கிறார். நான் 3 ஆம் ஆண்டு Collège யில் படிக்கிறேன். நாங்கள் தமிழ் பள்ளியிலும் படிக்கின்றோம். செல் என்ற கிராமத்தில் நாங்கள் வசிக்கிறோம்.

## La culture religieuse et les jeunes d'aujourd'hui.

Dans la vie de tous les chrétiens, la religion a une part très importante dans les différents choix de vie. En effet, que ce soit par rapport à la famille, aux études et au travail, nos actions seront orientées par notre foi et par notre savoir religieux. En France, les jeunes ont la chance d'avoir accès facilement à un savoir et à une culture religieuse catholique. En effet, la connaissance de la culture chrétienne se fait dès l'âge de 7 ans grâce au catéchisme. La catéchèse permet de faire grandir les enfants, les jeunes et les adultes dans la foi, l'intelligence du message chrétien et dans la vie chrétienne elle-même.

Dans la culture tamoule, les enfants sont, dès leur naissance, exposé à la vie en Christ par leurs parents. L'importance de la prière et de la messe est soulignée, tout comme l'importance des liens familiaux. L'amour et le pardon font parties des valeurs principales enseignées. La famille est donc l'un des principaux soutiens pour les jeunes dans leur foi. Le travail et les études sont des éléments essentiels dans nos vies, et la tradition chrétienne a toujours valorisé le travail. Cependant il ne faut pas pour autant délaisser la prière pour le travail. Il est enseigné aux jeunes à toujours chercher le Seigneur dans toutes nos actions, et lors de moments de doutes et de difficultés pendant notre travail et nos études, il faut nous rappeler ce que Jésus dit à son peuple : « Tout ce que vous demanderez avec foi par la prière, vous le recevrez. » (Matthieu 21:22).

Les jeunes ont de plus en plus de place et de responsabilités au sein de l'Église. Le scoutisme catholique en est un parfait exemple. En effet, tout en découvrant l'Évangile, les jeunes scouts apprennent à vivre en communautés, à donner sens à leur vie, et à se former une personnalité tout en contribuant à leur développement physique, mental et spirituel.

Fidélité à Dieu et à sa patrie, engagement à servir les autres et engagement à se conduire en scout sont les valeurs principales du scoutisme catholique. Aussi, de nombreux jeunes sont mobilisés en tant que servants d'autel et enfants de choeur dans nos églises. Cette participation active au service liturgique de la communauté chrétienne permet de montrer à quel point ils sont importants. Grâce à leur attitude et à leur recueillement, les servants d'autel aident les fidèles dans leurs prières. Un lien est créé entre le désir de devenir soeur ou prêtre et le service de l'autel.

Écrit par Jenitha JOY SUTHARSAN

இளையோர் களம்

இந்தியா

வேதியர் பேரா:தி.ம. சந்தியாகு வேங்கிடக்குளம்,

# புனித வளனாரின் வழிநடத்துதலில் இளையோர்



## வழிகாட்டி அமைவதெல்லாம் வானிறை தந்த கொடை!

அன்று புதன்கிழமை அது புனித யோசேப்பின் திருத்தலம். பிற்பகல் இரண்டு மணி, ஒருவர் பின் ஒருவராக இரு இளைஞர்கள் தனித்தனியே வந்து புனித யோசேப் திருச்சுருபத்திற்கு முன் முழந்தாள் படியிட்டு தங்களது வேண்டுதலை சற்று சத்தமாகவே சமர்ப்பித்தார்கள். முதலில் வந்தவர் “ சூசையப்பரே எனக்குப் போதாத காலமென்று நினைக்கிறேன். நான் ரொம்ப நம்பியிருந்த அந்த வழிகாட்டி, கபட மனதோடு எனக்கு நல்வழிகாட்டுவதாகக் கூறி சிக்கலில் இழுத்து விட்டதால்தான் அலைந்து கொண்டிருக்கிறேன். இப்ப உங்க வழிகாட்டுதலை நாடி வந்திருக்கிறேன், எனக்கு நல்ல வழிகாட்டுங்கள்” என்றார்.

அடுத்து வந்த இளைஞர் "புனித வளனாரே, என்னுடைய வாழ்க்கையில் நான் இந்த அளவுக்கு முன்னேற, உயர எனக்கு கிடைத்த புனித வழிகாட்டியே காரணம். அவர் காட்டிய வழியில் அணுபிசகாது நடந்ததினாலே நான் நல்லாப் படித்தேன், நல்ல வேலை கிடைத்தது. இப்ப வெளிநாட்டிற்கும் வந்திருக்கிறேன். மேலும் நல்ல வழிகாட்டிகளையே நான் பெற மண்றாடுங்கள்." என்றார். ஆம் வழிகாட்டிகள் அமைவது இறைவன் கொடுத்த வரம். திருத்தந்தை பிரான்சிஸ் தனது வழிகாட்டியாக வளனாரை அகில உலகத் திரு அவையின் பாதுகாவலராகப் பணியாற்றியதன் 150வது ஆண்டை முன்னிட்டு, ஒரு தந்தையின் இதயத்தோடு (Patris corde) என்னும் திருத்தூது மடலை அண்மையில் வெளியிட்டார் திருத்தந்தை அவர் அம்மடலில்.

### கனிவு கண் போன்றது

தூய ஆவியார் விளைவிக்கும் கனிகளில் எட்டாவது கனியாக "கனிவு" சுட்டிக்காட்டப்படுகிறது. (கலா:5:23) நற்செய்தியாளர் மத்தேயு மலைப்பொழிவின் தொடக்கத்தில் (மத் 5:5) கனிவுடையோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் நாட்டை (விண்ணகம் – மண்ணகம்) உரிமையாக்கிக் கொள்வர் என்று கூறியுள்ளார். ஆம் இந்தக் கனிவு என்ற உயரிய பண்பு கண் போன்றது எனக் கருதப்படுகிறது. தம் வாழ்நாளில் சாதனை படைத்தவர்களில் பலரும் கனிவையே தங்கள் அணிகலனாகக் கொண்டிருந்தனர் என்பது வரலாற்று உண்மை.




குமணன் என்ற தன் தனயனும், புகழ்மிக்க அரசனுமாகிய தலைசிறந்த வள்ளலைக் காட்டிற்கு அனுப்பிவிட்டான் இளங்குமணன் என்ற கொடியவன். வழக்கம்போல பாடிப்பரிசு பெறும் புலவர் சீத்தலைச் சாத்தனார் குமணனைத் தேடி காட்டிற்குச் சென்றார். வறுமையின் பிடியில் வாழ்ந்து வந்த தன்னிடம் வந்த புலவருக்கு பரிசளிக்க ஏதுமில்லை. உறைவாளைக் கையில் கொடுத்து "என் தலைக்கு ஆயிரம் பொன் விலை பேசியுள்ள தம்பி இளங்குமணனிடம் “ என் தலையை வெட்டி எடுத்துச் செல்க" எனக் கூறியது, கனிவுக்கு சான்று அல்லவா? இதே கனிவைத் தம் துணையாரிடம் காட்டி இல்லறத்தை இனிதே நடத்தினார் வளனார். தம்மிடம் இறைவேண்டல் செய்யக் கேட்பவர்களுக்காக கனிவுடன் பரிந்துரைத்து அவர்கள் வேண்டியதைப் பெற்றுக் கொடுத்து வருகிறார்.

### கீழ்ப்படிதலே கீர்த்தி பெற வழி

இன்று மாணவர்களுக்கு பெரும் கசப்பைத் தருவது ஆசிரியப் பெருமக்களின் "செய்" "செய்யாதே" என்னும் கட்டளைதான். ஒருவர் இறக்கும்வரை அவர் மாணவர்தான் என்ற உவகைக் களிப்பில் நன்மையின் பொருட்டு, உண்மையின் பொருட்டு, அறநெறியின் பொருட்டு கீழ்படிதலைத் தமது தலையாய கடமைகளுள் ஒன்றாகக் கருத வேண்டும். ஏனெனில் இயேசுவே தமது கீழ்படிதல் வழியாக தம் தந்தைக்கு ஏற்புடையவராக விளங்கினார். (எபி–5:8–9,10:7) (பிலி 2:6–11) மேலும் நம்பிக்கை அடிப்படையில் கீழ்படிந்து தற்போது பெற்றோரின் பட்டியலை எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தின் பதினொராம் அதிகாரம் நமக்கு விவரிக்கிறது. உலக வாழ்வில் பெருவாழ்வு வாழ்ந்தோராகக் கருதப்பட்டவரில் பலர், கீழ்படிதலை தமது வாழ்வின் குறிக்கோளாகவே கொண்டிருந்தனர். ஆம் புனித வளனாரும் கனவின் வழியாகத் தமக்கு அறிவிக்கப்பட்ட கட்டளைக்கு, உடனே கீழ்படிந்து திருக்குடும்பத்தின் பொறுப்புள்ள காவலராக விளங்கினார். (மத் 2:13–15, 20–23) சகிப்புத்தன்மையும், பொறுமையும், கீழ்படிதலில் வெளிப்படும் இரு கண்கள். அவைகளால் நம்பிக்கை என்னும் இதயத்தின் செயல்பாடாக்க வேண்டும். விவேகத்தோடு கீழ்படிதல் வெற்றிக்கு இட்டுச்செல்லும்.

### ஏற்போம் ஏற்கப்படுவோம்.

இன்று உலகில் மாபெரும் கொடுமைகளில் ஒன்றாகப் பார்க்கப்படுவது ஏற்றுக்கொள்ளப்படாமை (In Acceptence). கடவுள் தம் உருவிலும், சாயலிலும் படைத்த மனிதனை 1:26:27 பலர் புழுவுக்கும் கீழாக மதிப்பதால், மனத்துயர் அதிகரிக்கிறது. மானிட உருவில் வந்த ஆண்டவர் இயேசுவைப் பல கட்டங்களில் யூதர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. (காண்:யோவா1:11) பல இலட்சம் செலவளித்து வீடு கட்டி புதுமனைப் புகுவிழாவும் நடந்துவிட்டது. வீட்டின் உரிமையாளருக்கு வினோத எண்ணம்.

அதாவது தன் வீட்டிற்கு யார் வந்தாலும் எதையாவது பெற்றுக்கொண்டு செல்லத்தான் வருவார்கள் என்பதே அந்த எண்ணம். ஒரு நாள் ஒரு மனிதன் அரைக்கால் சட்டை பனியனுடன் அந்த வீட்டு கேற்றின் முன் நின்று கொண்டிருந்தான். அவனை விரட்டியடிப்பதற்காக வீட்டின் உரிமையாளர் தொலைபேசியில் இருபது நிமிடம் எதையோ பேசினார். அவன் பேசுவதாயில்லை. தொலைபேசியை ஓங்கி அடித்து வைத்துவிட்டு "ஏனப்பா உனக்கு என்ன வேணும்? என்றார் அவர். "ஐயா உங்கள் வீட்டுத் தொலை பேசிக்கு இணைப்புக் கொடுக்க வேண்டும் " என்றான். இணைப்பு இல்லாத தொலைபேசியில் பேசி நடித்த அவர் வெட்கப்பட்டார். புனித வளனார் எல்லாச் சூழலையும் இளையோர் உட்பட எல்லா மாந்தரையும் ஏற்றுக்கொண்டார். இன்று எண்ணற்ற துறவற சபைகள், நிறுவனங்கள் ஆகியவற்றால் ஏற்றுக் கொள்ளப்பட்டு பாதுகாவலராகத் திகழ்கின்றார்.

### ஆக்கபூர்வ ஆற்றல் துணிவு தரும்.

திருவிவிலியம் இணைத்திருமறை நூல்களான யூதித்து மற்றும், எஸ்தர் நூல்கள் ஆக்கபூர்வத் துணிவுக்கு அற்புதமான எடுத்துக்காட்டுக்கள். ஆம் நமது துணிவு நன்மைக்கு இட்டுச்செல்ல வேண்டும். கன்னிமரியாயின் களங்கமில்லாத் தாய்மையில் ஐயங்கொண்ட வளனார் இறை விளக்கத்திற்குப் பின் துணிவுடன் ஏற்றுக் கொண்டார். (மத்: 19 –24) அவர் வாழ்ந்த சமூகச் சூழலில் அது மிகவும் தைரிய முடிவாகக் கருதப்படுகிறது. ஆம் இயேசுவின் உயிர்த்தெழுதலில் ஐயம் கொண்ட திருத்தூதர் தோமா முதலில் சந்தேகப்பட்டார். பிறகு துணிவுடன் ஏற்றுக்கொண்டார். (யோவா:20:24–29) இயேசு பெத்தானியாவில் இருந்த இவர்கள் வீட்டிற்குச் செல்வோம் எனக் கூறிய போது பயந்த பிற திருத்தூதர்களுக்கு மத்தியில் இதே தோமாதான் துணிவுடன் " நாமும் செல்வோம் அவரோடு இறப்போம்" (யோவா:11:16) என்றார். புனித வளனார் மற்றும் பெரியோர் வழியில் துணிவை அணிந்து கொள்வோம்.

### உழைப்பு ஒன்றே உயர்வுக்கு வழி

கடின உழைப்புக்கு ஈடு இணை ஏதுமில்லை என்பது இந்திராகாந்தி வெளியிட்ட இருபது அம்சத் திட்டங்களுள் ஒன்று. ஆம் இதனையே வளனார் தம் வாழ்வில் வெளிப்படுத்தினார். "உழைக்க மனமில்லாத எவரும் உண்ணலாகாது."
(2: 3, 10) என்றே திருத்தூதர் பவுல் குறிப்பிடுகிறார். இருபெரும் விழாக்களுக்குச் சொந்தக்காரரான வளனாரின் மே முதலாம் தேதி விழா உழைப்பை மையப்படுத்தியே கொண்டாடப்படுகிறது. இதனாலேயே “ உழுகிற நாளில் ஊருக்குப் போகிறவன் அறுவடை நாளில் வயல் பக்கம் போகத் தேவையில்லை” என்றொரு உலக சொல்லடை உள்ளது. உழைப்போம், உயர்வோம்!

### தந்தை வளனார் – நிழலா! நிஜமா!

மறைக்கல்வியில் விளக்கப்படும் ஓர் அடையாளம். எப்படித்தான் மறைந்து ஓர் உயரிய கருத்தை விளக்குகின்றதோ, அதே போல புனித வளனார் நமக்கு பின்புலமாக நின்று அன்பு செய்திட, கனிவு காட்டிட, கீழ்படிந்திட, ஏற்று இணைந்திட, துணிவு பெற்றிட – காட்டிட, உழைத்து உயர்ந்திட வழிகாட்டுகிறார். இந்த வளனாரைப் பலர் நோபிள் (புனிதம்) எனக் கொண்டாடுகின்றனர். உயர்கின்றனர். சிலர் லேபிள் (விளம்பரம்) எனக் காண்கின்றனர். இளையோர் திருத்தந்தை பிரான்சிஸைப் போன்று புனித வளனாரைச் சிறந்த வழிகாட்டியாகக்கொண்டு வாழ்வாங்கு வாழ நல்வாழ்த்துக்கள். ✱✱✱✱✱✱✱✱✱✱✱✱

# Aller à la messe




**Aller à la messe, c'est important.**

Je suis sûre que quand un ami te demande de venir à son goûter d'anniversaire à la messe, tu es content. C'est Jésus lui-même qui t'invite chaque dimanche. La messe est beaucoup plus importante qu'un goûter d'anniversaire. Si tu le veux, tu l'accepte. Jésus te donnera la force de lui ressembler, de devenir comme lui. Il se présente en toi. Tu verras …..

Au début du mal à tout comprendre. Ton missel va t'aider, il te permettra de suivre Dieu… Mais le plus important est de comprendre avec ton cœur. On ne prie pas seulement avec la tête mais aussi avec son corps. On est assis pour bien écouter les lectures et l'homélie, on peut s'asseoir pour réfléchir et pour prier. On se met à genoux pour demander pardon et dire qu'on est tout petit devant Dieu. On se met aussi à genoux pour adorer, c'est à dire exprimer un très grand amour et un très grand respect. On peut le faire au moment de la conservation du pain et du vin. Ceci est un très beau geste, mais attention fais-le seulement si tu as la place pour le faire, sans gêner personne et sans faire de bruit. Merci Prier et aimer Dieu

### புதிர் தோட்ட விடைகள்

1. மெழுகுவர்த்தி.
2. சூரியன்.
3. மீன்.
4. வானம்.
5. கரும்பு
6. ஊசி
7. தேங்காய்
8. தண்ணீர்
9. புகையிரதம் (தொடருந்து)
10. கனவு
11. கண்ணாடி
12. சிரிப்பு.
13. முதுகு

# மூத்த பெற்றோர் மற்றும் வயது முதிர்ந்தோர் நாள்



இந்த 26ந் திகதி ஆடி மாதம் கத்தோலிக்கத் திருஅவையின் முதன்மையான நாள். இயேசுவின் தாத்தா-பாட்டி என்னும் புனித சுவக்கின்-அன்னா ஆகியோரின் திருநாளை ஒட்டி வருகின்ற ஞாயிற்றுக்கிழமையை, " உலக மூத்த பெற்றோர் மற்றும் வயது மூத்தோரின் நாள்" என்று கொண்டாடுமாறு நம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்கள்.

"நான் உங்களோடு என்றும் இருக்கிறேன்" என்ற தலைப்பில் அவர் வழங்கியுள்ள இன்றைய நாளுக்கான செய்தியின் பின்புலத்தில் நாம் இன்று சிந்திப்போம்.

"நான் உங்களோடு என்றும் இருக்கிறேன்" என்ற இவ்வாக்கியத்தை திருத்தந்தை மூன்று பொருள்களில் பயன்படுத்துகின்றார்:

**ஒன்று,** ஆண்டவராகிய இயேசு, தன் திருத்தூதர்களிடம் இறுதியாகச் சொன்ன இதே வார்த்தைகளை, இன்று வயது முதிர்ந்த உங்களிடம் சொல்கின்றார் என்று வயது முதிர்ந்தவர்களுக்கு நம்பிக்கை தருகின்றார் திருத்தந்தை.

**இரண்டு,** வயது முதிர்ந்த நிலையில் "நான் உங்களோடு இருக்கிறேன்" என்று தன் வயது முதிர்ந்த நிலையை அறிக்கையிடுகின்றார்.

**மூன்று,** நீங்கள் உங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கும், இந்தச் சமூகத்திற்கும் இதே செய்தியைத் தருகின்றீர்கள். ஏனெனில், உங்களது இருத்தல் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் நிறையத் தேவை என்று பெரியவர்களின் இன்றியமையாத நிலையை நமக்குச் சுட்டிக்காட்டுகின்றார். தாத்தா-பாட்டியர் மற்றும் வயது முதிர்ந்த இவர்கள் மூன்று நிலைகளில் நம் சமூகத்திற்கு உதவி செய்கிறார்கள் என்கிறார் திருத்தந்தை.

### ஒன்று, கனவுகள்

யோவேல் இறைவாக்கினர், "முதியவர்கள் கனவு காண்பார்கள்" என்று முன்னுரைத்தார். முதியவரின் கனவுகள் இளைய தலைமுறையை வழிநடத்துகின்றன. வாழ்வின் நாள்கள் குறுகிய நிலையில் தாங்கள் கண்ட கனவு நனவாக வேண்டும் என்று அவர்கள் துடிக்கிறார்கள். அந்தக் கனவை சில நேரங்களில் அடுத்த தலைமுறைக்கு விட்டுச் செல்கிறார்கள். கனவுகளே நம் நாள்களை நகர்த்துகின்றன.

### இரண்டு, நினைவுகள்

பெரியவர்களின் நினைவுகள் நமக்கு ஆச்சரியம் தருகின்றன. நிகழ்காலத்தில் இருந்துகொண்டு, கடந்த காலத்தின் நினைவுகளை அசைபோட்டு, எதிர்காலம் நோக்கிப் பயணிப்பவர்கள் இவர்கள். "நாங்கள் இப்படி இருந்தோம்" என்று அவர்கள் சொல்வது நம்மைப் பயமுறுத்த அல்ல. மாறாக, அந்தக் கஷ்டம் உங்களுக்கு இல்லாத நிலையில் நீங்கள் மகிழ்ச்சியாக இருங்கள் என்று, நம்மை உற்சாகப்படுத்துவதற்காகவே. தங்கள் ஊரைவிட்டுப் புலம் பெயர்ந்த நினைவுகள், தங்கள் அன்புக்குரியவர்களை இழந்த நினைவுகள், தங்கள் வாழ்வில் தாங்கள் எதிர்கொண்ட எதிர்மறையான நிகழ்வுகள் என நிறைய நினைவுகளை அவர்கள் சுமந்து நிற்கிறார்கள்.

### மூன்று, இறைவேண்டல்

திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள் தான் திருத்தந்தை பணியைத் துறந்தபோது, சொன்ன வார்த்தைகளை நாம் இங்கே நினைவுகூரலாம்: "இளையோரின் பரபரப்பான செயல்களை விட, வயது முதிர்ந்தவர்களின் இறைவேண்டலே இவ்வுலகைப் பாதுகாக்கிறது." தங்களின் தனிமையில், இயலாமையில், வயது முதிர்ந்தவர்களின் வாய் எதையோ முணுமுணுத்துக்கொண்டே இருக்கின்றது. சில நேரங்களில் அவர்கள் காக்கும் மௌனமும் ஒரு மொழியே. நிற்க.

### இன்றைய நாளை நாம் எப்படிக் கொண்டாடுவது?

(1) நம் மூத்த பெற்றோர் இன்று நம்மோடு இருந்தால், அவர்கள் அருகே அமர்ந்து அவர்களோடு சில நிமிடங்கள் செலவிடுவது.

(2) அவர்கள் இன்று நம் நினைவில் வாழ்ந்தால், அவர்களுடைய கல்லறை அல்லது நினைவிடத்திற்குச் செல்வது.

(3) அவர்கள் விட்டுச் சென்ற மதிப்பீடுகளை எண்ணிப் பார்ப்பது.

(4) இன்று நாமே மூத்தபெற்றோர் நிலையில் இருந்தால் நம் பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளோடு உறவாடுவது.

(5) மூத்தவர்களை இன்று நாம் கண்டால், அவர்களுக்கு வணக்கம் சொல்வது.

(6) முதியோர் இல்லம் அல்லது மருத்துவமனை நமக்கு அருகில் இருந்தால், அங்கு சென்று யாராவது ஒருவரைச் சந்தித்து அவருடன் சற்றுநேரம் உரையாடுவது. "வயது முதிர்ந்தவர்களோடும் குழந்தைகளோடும் உரையாடும்போது நம் மனம் நிறைய பக்குவப்படுகிறது" என்பது நிதர்சனமான உண்மை. நமக்கு அருகில் வயது முதிர்ந்த ஆயர்கள், அருள்பணியாளர்கள், அருள்சகோதரிகள், அருள்சகோதரர்கள் இருந்தால் அவர்களைத் தேடிச் சென்று அவர்களோடு சில நிமிடங்கள் உரையாடுவது.

(7) நம் வாழ்வில் இன்று நாம் எந்த நிலையில் இருந்தாலும் - குழந்தை, இளவல், பெரியவர், மூத்தவர் – வாழ்க்கை என்ற கொடைக்காக நன்றி கூறுவது.

(8) வாழ்வின் நிலையாமையை ஏற்றுக்கொள்வது.

(9) நம் வாழ்வின் மகிழ்ச்சியைக் கெடுக்கும் தேவையற்ற பழக்கங்களை, உணர்வுகளை, செயல்களைக் கைவிட உறுதி எடுப்பது. "தன் தாத்தா-பாட்டியை நினைவுகூர்ந்து, அவர்கள் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று செயல்படும் அருள்பணியாளர் கண்ணியமாக இருப்பார்" என்பது அமெரிக்காவின் ஒரு மறை மாவட்டப் பத்திரிக்கையில் வாசித்த ஒன்று.

(10) இறுதியாக, நம் திருத்தந்தை அவர்களோடு இணைந்து இறைவேண்டல் செய்வது. இன்று, முதியவர்கள் தேவையற்ற சுமைகளாகக் குடும்பங்களிலும் சமூகத்திலும் பார்க்கப்படுகின்றனர். இந்த நிலை மாறவும், மனித மாண்புடனும் தன்மதிப்புடனும் அவர்கள் நடத்தப்படவும் நாம் முயற்சிகள் எடுப்பது.

மூத்தபெற்றோர் மற்றும் வயது முதிர்ந்தோர் நாள் நல்வாழ்த்துகள்!

(Edited from the article by
அருள்திரு யேசு கருணாநிதி)




1. கண்ணீர் விட்டு வெளிச்சம் தருவாள். அவள் யார்?

2. திரி இல்லாத விளக்கு உலகம் எல்லாம் தெரியும் அது என்ன?

3. உள்ளே இருந்தால் ஓடித் திரிவான் வெளியே வந்தால் விரைந்து மடிவான். அவன் யார்?

4. பிடி இல்லாத குடையைத் தொட முடியவில்லை. அது என்ன?

5. யானையும் விரும்பும், சேனையும் விரும்பும் அடித்தால் வலிக்கும், கடித்தால் இனிக்கும். அது என்ன?

6. ஒற்றைக் காதுக்காரன் ஓடி ஓடி வேலி அடைக்கிறான். அவன் யார்?

7. கிண்ணம் நிறையத் தண்ணீர் இருக்கிறது.ஆனால் குருவி குடிக்க வழியில்லை. அது என்ன?

8. அள்ள முடியும், ஆனால் கிள்ள முடியாது. அது என்ன?

9. ஊளையிட்டுக் கொண்டே ஊரைச் சுமக்கும். அது என்ன?

10 படுத்துத் தூங்கினால் கண்முன் ஆடும்.விழித்தால் மறைந்தே ஓடும் அது என்ன?

11. நான் பார்த்தால் அவன் பார்ப்பான். நான் சிரித்தால் அவன் சிரிப்பான். அவன் யார்?

12. வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ எது?

13.தொட்டுப் பார்க்கலாம். எட்டிப் பார்க்க முடியாது. அது என்ன?

(விடைகள் பக்கம் 7)

# தூய நற்கருணை



நற்கருணை கத்தோலிக்க கிறிஸ்துவத்தின் உயிர்மூச்சாய் திகழும் ஒப்பற்ற அருளடையாளம் நற்கருணை. நற்கருணை என்னும் சொல் "இறைவன் தருகின்ற நன்மை மிக்க கொடை" என்ற பொருளைத் தருகின்றது. யூக்கரிஸ்தியா" என்ற கிரேக்க மூலச் சொல்லை மொழி பெயர்க்க விரும்பிய தத்துவ போதகர் (1577–1656) நற்கருணை என்ற சொல்லை முதல் முதலில் பயன்படுத்துகிறார். "காரிஸ்" என்ற இலத்தீன் சொல் "கருணை" என்ற பொருளைக் குறிப்பதால் நல்ல கருணை என்று மொழிபெயர்த்தார். அவருக்கு பின் வந்தவர்கள் நற்கருணை என்ற சொல்லையே கலைச்சொல்லாகக் கையாண்டனர்.

வீரமாமுனிவர் (1680–1747) நற்கருணை என்ற சொல்லை விளக்குகின்ற நேரத்தில் " இறைவனின் அணைகடந்த அருள் கூறும் எழில்'' என்கிறார்.

நற்கருணை என்ற சொல் பொருத்தமாக இருந்தாலும் யூக்கரிஸ்தியா என்ற கிரேக்கச் சொல்லின் பொருளான " நன்றி கூறுதல்" என்ற கருத்தைச் சுட்டிக் காட்டவில்லை. அந்த கிரேக்கச் சொல் இறைவன் இஸ்ராயல் மக்கள் வரலாற்றில் நிகழ்த்திய அரும்பெரும் செயல்களை நினைவுகூர்ந்து நன்றி சொல்லும் உள்ளார்ந்த மனநிலையைக் குறிக்கின்றது. இறைவனின் கருணையை உள்வாங்கி அவருக்கு தாரான மனத்தோடு நன்றிகூறுதல் என்ற அர்த்தத்தைத் தருகின்ற ஒரு சொல்லாக "நற்கருணை"யைப் பயன்படுத்தும் போது அதன் அர்த்தங்கள் நிறைவுபெறும்.

நற்கருணை என்ற சொல் குறித்துக்காட்டும் செயல்கள் இரண்டு வகைப்படும். ஒன்று வார்த்தை வடிவிலான நன்றி வெளிப்பாடு. மற்றொன்று அந்த வெளிப்பாட்டிலிருந்து வருகின்ற அடையாளச் செயல். நன்றி உணர்வில் எழுகின்ற வார்த்தைகள் கவிதைகளாக, காவியங்களாக உருவெடுக்கின்றன. சமுதாயமாக சேர்ந்து தங்கள் வாழ்வில் இறைவன் காட்டிய கருணைக்கு நன்றி கூறும் நேரங்கள் அருளின் நேரங்கள், ஆனந்தத்தின் நேரங்கள். இந்த நன்றி உணர்வுகள் சில அடையாளச் செயல்களில் தங்களை வெளிப்படுத்துகின்றன. மலர் கொடுத்தல் தமிழக மரபுக்கே சொந்தமான அடையாளம். பூசை" என்ற வார்த்தை பூக்களால் செய்யப்படும் அடையாளச் செயலைக் குறிக்கிறது. நற்கருணையில் அப்ப ரச அர்ப்பணங்கள் நன்றியின் அடையாளங்கள். இறைவனின் மாபெரும் கொடையாகிய ' உணவை" அடையாளமாக்கி இறைவனுக்கு நன்றி செலுத்தும் ஆழமான வழிபாட்டுச் செயல் நற்கருணையில் நடைபெறுகிறது. எனவே வார்த்தை வழியாகவும் அடையாளங்கள் வழியாகவும் நன்றி உணர்வை வெளிப்படுத்தும் நிகழ்ச்சியே நற்கருணை. மீட்பிற்காக நன்றி கூறி கிண்ணத்தை யெடுத்து, ஆண்டவரின் திருப்பெயரைக் கூப்பிடுவேன் என்ற நம்பிக்கைச் செயல். யாவே கடவுளின் உடனிருப்பை உறுதிப்படுத்திக் கொள்ளும் உன்னதமான சடங்கு நிகழ்ச்சி.

இந்த விழாவின் கருவாக இருப்பது இஸ்ராயல் மக்களின் விடுதலைப் பயணம். இஸ்ராயல் இனத்தின் ஒற்றுமைக்கு, வாழ்வுக்கு, நம்பிக்கைக்கு மையமாக விளங்கும் இந்த நிகழ்ச்சி கொண்டாடப்படும்போது புதுப்பொலிவோடு வாழ்வின் ஊற்றுக்களாக வடிவெடுக்கின்றது. வரலாற்றில் நிகழ்ந்த அத்தனை நிகழ்ச்சிகளையும் எகிப்து நாட்டிலிருந்து தாங்கள் வெளிவந்த அந்த அற்புதமான நிகழச்சியோடு இணைத்துப் பார்த்தனர் இஸ்ராயல் மக்கள்.

(தொடரும் மறு இதழில்)

G.RATHINI

## பசியால் இறந்தோர் நினைவாக ஒலிக்கப்படும் ஆலய மணிகள்



பசி, மற்றும்,அது தொடர்பான காரணங்களால், உலகில் தினமும் ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும், சிறாரும் உயிரிழந்து வருவது குறித்து பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கும் நோக்கத்தில், இம்மாதம் 30ம் தேதி ஆஸ்ட்ரியாவின் அனைத்து ஆலய மணிகளும், இறந்தோர் நினைவாக ஐந்து நிமிடம் ஒலிக்கப்படும்.

இயேசு மரணமடைந்த நேரமான மாலை 3 மணிக்கு, இவ்வாண்டு ஜூலை 30ம் தேதி, ஆஸ்ட்ரியாவின் அனைத்து ஆலய மணிகளும் இறந்தோர் நினைவு ஒலியை எழுப்பும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு குறித்துப் பேசியுள்ள ஆஸ்ட்ரிய ஆயர் பேரவைத் தலைவர் பேராயர் Franz Lackner அவர்கள், “ பசிக்கொடுமை நிலவும் ஓர் உலகில் நாம் வாழ்ந்து வருகிறோம், உதவி தேவைப்படும் இடங்களுக்கு நாம் உதவவேண்டும்” என்று கூறியுள்ளார்.

ஜூலை 30ம் தேதி ஒலிக்கப்படும் ஆலய மணிகள், நம் அன்றாடப் பணியிலிருந்து சற்று விலகி, நம்மைச் சுற்றிலும், உலகெங்கிலும் மக்கள் எதிர்கொள்ளும் துன்பங்கள் பற்றிச் சிந்திக்க அழைப்பு விடுக்கின்றன என்றும், பேராயர் Lackner அவர்கள் கூறியுள்ளார்.

ஆஸ்ட்ரியாவின் கத்தோலிக்க ஆயர் பேரவையின் ஆதரவோடு, அப்பேரவையின் காரித்தாஸ் அமைப்பு, இந்நிகழ்வை, கடந்த நான்கு ஆண்டுகளாக நடத்தி வருகிறது. இப்பூமிக் கோளத்தில், ஏறத்தாழ 82 கோடிப் பேர், அதாவது, ஒன்பதில் ஒருவர், பசியால் துயருறுகின்றனர், கோவிட்-19 பெருந்தொற்று விதிமுறைகளால் இவ்வெண்ணிக்கை கடந்த ஆண்டில் அதிகரித்துள்ளது என்று, ஆஸ்ட்ரிய காரித்தாஸ் கூறியுள்ளது.

ஆப்ரிக்காவில், பல போர்களாலும், காலநிலை மாற்றத்தின் பாதிப்பாலும், ஏற்கனவே, மக்கள் துன்புறும் வேளை, பெருந்தொற்று நெருக்கடியும், இத்துன்பத்தை அதிகரித்துள்ளது என்றுரைத்துள்ள காரித்தாஸ் அமைப்பு, ஆப்ரிக்காவில், மூன்று சிறாருக்கு ஒருவர், கடும் ஊட்டச்சத்துக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் கூறியுள்ளது.

### கொஞ்சம் சிரிங்க.........

ஆசையே துன்பத்துக்குக் காரணம்னு இப்பதான் நான் தெரிஞ்சுக்கிட்டேன்!

எப்படி?

என் மனைவியை நான் ஆசைப்பட்டுத் தானே கல்யாணம் பண்ணிக்கிட்டேன் ….

## பேராயர் பேரருட் கலாநிதி தியோப்பிளஸ் அன்று மெலிசன் அமதி ஆண்டகை

### விண்ணகப் பிறப்பின் 116வது ஆண்டு நினைவுகள்.

- ⇒ 1844ல் பிரான்ஸ் தேசத்திலே பிறந்தார்.
- ⇒ 1868ல் அமல மரி தியாகிகள் சபையின் குருவாக அருட்பொழிவு செய்யப்பட்டார்.
- ⇒ 1880ல் அட்றியானா மாநிலத்தின் ஆயராக அபிஷேகம் செய்யப்பட்டார்.
- ⇒ 1883ல் பேரருட் கலாநிதி பொஞ்சீன் அமதி ஆண்டகை கொழும்பு உயர் மறைமாவட்டத்திற்கு மாற்றம் செய்யப்பட்டபோது மெலிசன் அமதி ஆண்டகை, யாழ் மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க பரிபாலகராக நியமனம் பெற்றார்.
- ⇒ 1886 நவம்பர் 25ல் யாழ்ப்பாண மறை மாவட்டத்தின் முதலாவது ஆயராக நியமிக்கப்பட்டார்.
- ⇒ ஆயர் பொஞ்சீன் அமதி ஆண்டகை அடித்தளமிட்ட பணிகளை நிறைவுசெய்து வைத்தவர் இவரே.
- ⇒ மிகப் பிரம்மாண்டமான புனித பத்திரிசியார் கல்லூரி யின் கட்டடங்களை கட்டி முடித்தார்.
- ⇒ புனித மாட்டீனார் குருமடத்தின் எழில்மிகு கட்டடத்தை கட்டிமுடித்தார்.
- ⇒ யாழ்ப்பாண கத்தோலிக்க நூலகம் உருவாக்கப்பட்டது.
- ⇒ யாழ் மறைமாவட்டமெங்கும் பல பக்திச் சபைகள் உருவாக்கப்பட்டன.
- ⇒ 10 ஆண்டுகள் யாழ் மறைமாவட்டத்தை கட்டி எழுப்பிய பின் 1893ல் கொழும்பு உயர் மறை மாவட்டத்தின் பேராயராக பணிமாற்றம் செய்யப்பட்டார்.
- ⇒ 27 யூன் 1905ல் கொழும்பில் தனது 61வது வயதில் இறைவனில் இளைப்பாறினார்.

## சிறுவர்களுக்கான விவிலிய வினா விடை 2021



1. விவிலியத்தில் உலா புத்தங்கள் எத்தனை?
2. கடவுள் முதல் நாள் எதைப் படைத்தார்?
3. ஆதிப் பெற்றோரின் பெயர் என்ன?
4. ஏவாள் ஆதாம் என்பதற்கு பொருள் என்ன?
5. இயேசுவின் பிறப்பை கேட்டதும் கலக்கமுற்றவர் யார்?
6. இம்மானுவேல் என்றால் என்ன?
7. கடவுள் மனிதனை எங்கு குடியிருக்க செய்தார்?
8. கடவுள் பெண்ணை எதிலிருந்து படைத்தார் ?
9. தோட்டத்தின் நடுவில் என்ன மரம் இருந்தது ?
10 அந்த மரத்தின் கனியை முதலில் உண்டது யார்?




கடந்த சிறுவர்களுக்கான விவிலிய வினா விடைப் போட்டியில் 1ம் இடத்தை செல்வி: அருளப்பு அனபெல் என்பவர் பெற்றுக் கொண்டார் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்து, ஆன்மீகப்பணியகம் அவரை வாழ்த்தி நிற்கின்றது. அவருக்குரிய பரிசு ஒக்டோபர் மாதம் 31ந்திகதி ஆன்மீகப்பணியகத் திருவிழா அன்று வழங்கப்படும்.

## விவிலிய அறிவுப்போட்டி - 74




1. தானியேலை கொல்லத் தேடிய அரசனின் காவல்படைத் தலைவன் யார்?
2. அந்த நாட்களில் பாபிலோனிய அரசன் யார்?
3. நெபுகத்நேசர் அரசன் செய்த பொற்சிலையின் அளவு என்ன? அதை எங்கே நிறுத்தினான்?
4. அறுபத்திரண்டு வயதில் அரசை தனதாக்கிக் கொண்டவர் யார்?
5. தானியேலுக்கு வேறு பெயர் என்ன?
6. அரண்மனை அலுவலரின் தலைவன் யார்?
7. நெபுகத்நேசர் நிறுவிய பொற்சிலையை வணங்காவிடில் என்ன தண்டனை என அறிவித்தார்?
8. இஸ்ராயேல் இனத்தாருக்கு காவல் தலைவராக எழும்பியது யார்?
9. தானியேலுக்கு கடவுள் தந்த சிறப்பான கொடையாது?
10. கடவுள் தேர்ந்தெடுத்த நான்கு இளைஞர்கள் யார்?

## விவிலிய பொது அறிவுப்போட்டி முடிவுகள் - 73

**சரியான பதில்கள்: எசெக்கியேல் 16-48**

1) லெபோனின் கேதுரு மரங்கட்கு **31:3**
2) பதினெட்டாயிரம் கோல் **48:35**
3) கருவாலி மரங்களால் **27:6**
4) கோகு **32:2**
5) 25 000முள நீளம் 10000முள அகலம் **48:03**
6) அமோனா **39:16**
7) சிமியோன், இசக்கார், செபுலோன் **48:33**
8) 30 அறைகள் **40:17**
9) நெபுகத்நேசர் **26:7**
10) தண்ணீர், எண்ணை **16:9**

## பரிசு பெறுபவர்கள் விபரம்

**1ம் பரிசு: செல்வி: யோ.சியாமளா - Drancy**
**2ம் பரிசு: திருமதி: மரிய செல்வநாயகம் - Noisy le sec**
**ஏனையவர்கள்:**

1. திரு. அருளப்பு கிறிஸ்ரியன் - Paris
2. திருமதி: யேசுதாசன் ஜொய்ஸ் - Clemart
3. திருமதி: கெலனா யோசவ் - Garges les Goness
4. திருமதி: அன்று -Meaux
5. கெவின் பெனடிக் பிரசாந்தன் - Villtaneuse
6. செல்வி: சத்தியேந்திரா மெல்றின் - Paris
7. திருமதி: டக்ளஸ் டானி - Neuilly sur Marne
8. திருமதி: றீற்ரா செல்வரட்ணம் - Neuilly sur Marne
9. செல்வி: லுசியா மேரி - Paris
10. திருமதி: றெஜினா பிறிஜெட் - Sevran
11. செல்வி: கிருத்திகா கிருபாகரன் - Vigneux sur seine
12. திருமதி: கொன்சன்ரைன் கருணாமலர் - Vigneux s/s
13. திருமதி: சங்கர் ஜெனீபா - Vigneux sur seine
14. திருமதி: ஜேம்ஸ் மேரி றீற்ரா - Paris

**அருட்பணி: போல் மத்தியூ மதன்ராஜ்**
**பணியக இயக்குனர்**

## விவிலியத் தேடல்




விவிலியம் நம் கிறிஸ்தவ வாழ்வுக்கு வழிகாட்டும் அரிய நூல். விவிலியம் இல்லை என்றால் கிறிஸ்தவ சமயமே இல்லை.

இந்நூல் பற்றி சற்று விளக்கமாகவும், ஆழமாகவும் அனைவருக்கும் புரியும்படி தெளிவாகஆதாரத்துடன் கூறுவதே எமது நோக்கம்.

மீட்பின் வரலாற்றை விவிலியம் நமக்குக் கொடுக்கின்றது. மனித மொழியில் இருப்பதால் நாம் ஆய்வுக் கண்ணோட்டத்தில் வாசிக்கலாம். இறைமொழியில் இருப்பதால் திருவிவிலியத்தை நாம் வாசிக்கும்போது செப உணர்வோடு வாசிக்க வேண்டும். விசுவாசத்தோடு வாசிக்க வேண்டும். வாழ்வு தருவது விவிலியம் என்ற நம்பிக்கையோடு வாசிக்க வேண்டும். இப்படி வாசித்தால் நாம் விவிலிய த்தில் இருந்து வாழ்வு பெறுவோம். அந்த விவிலியம் நமக்கு விடுதலை தரும் என்பது உறுதி.

### விடுதலை தரும் விவிலியம்

விவிலியம் இரு பெரும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டு மிகவும் தெளிவாக காட்டப்பட்டுள்ளது. விடுதலைக் கருத்துக்கள், இதுபற்றி தெளிவான கண்ணோட்டங்களும், மோசே எவ்வாறு விடுதலை வீரரானார்,
8 விடுதலை பணியில் மரியாளின் பங்கு, இறுதியில் விடுதலை நாயகர் இயேசுவே தான் என்று விபரமாக கூறுகின்றன.

பழைய ஏற்பாட்டு நூல்கள் 4 வகையாகப் பிரிக்கப்படுகிறது.

⇒ திருச்சட்ட நூல்கள்
⇒ வரலாற்று நூல்கள்
⇒ ஞான நூல்கள்
⇒ இறைவாக்கினர் நூல்கள்.

### திருச்சட்ட நூல்கள் – 5

தொடக்கநூல், லேவியர், இணைச்சட்டம், விடுதலைப் பயணம், எண்ணிக்கை. இவை மோசேயால் எழுதப்பட்டதாக பாரம்பரியம் கூறுகின்றது.

இதுவே இஸ்ராயேல் மக்களின் திருச்சட்டம். இச் சட்டங்கள் தங்கள் வாழ்விலும், வழிபாட்டிலும், கடைப்பிடிக்க வேண்டிய அடிப்படைச் சட்டங்களாக் திகழ்கின்றன.

### வரலாற்று நூல்கள் 16

* யோசுவா, அரசர்கள், நெக்கேமியா, நீதித்தலைவர்கள், 2 அரசர்கள், எஸ்தர், ருத்து, 1 குறிப்பேடு, யூதித்து, 2 சாமுவேல், எஸ்ரா, 1 மக்கபேயர், 2 மக்கபேயர்.

இஸ்ராயேல் மக்களின் வரலாற்று நிகழ்வுகளில் கடவுள் முழுமையாக ஈடுபட்டு, வழிநடத்தி, பராமரித்து பாதுகாத்தார். இந்நூல்கள் வரலாற்று நூல்களாகும்.

(தொடரும் ...............)

# குறுக்கெழுத்து புதிர்

## போட்டி இலக்கம் 75

### விடுதலைப் பயணம் (21-40 அதிகாரம் வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | 2 | | | | 3 |
| | 4 | | | ■ | | 5 | | | |
| 6 | | | | | | | | | |
| | | | | 7 | 8 | | 9 | 10 | |
| 11 | | | | | | 12 | | | |
| 13 | | | | | 14 | | | | 15 |
| | 16 | | | 17 | | | 18 | | 19 |
| | | 20 | 21 | | 22 | 23 | | | |
| | | | 24 | | | 25 | | | |
| 26 | | | | 27 | | | 28 | | |

### இடமிருந்து வலம்

1) அப்போது மோசே தம் கடவுளாகிய ஆண்டவர் முன்........
2) அழகுற பின்னப்பட்டஉடைகள் ..... ஆரோனுக்காக
4) ஒரு மூடுதிரையின்.......30 முழமும் நாலுமுழமும்
6) அதன் அனைத்து துணைக்......கொக்கிகள், சட்டங்கள்
11)........மரத்தால் குறுக்குச் சட்டங்களையும் செய்தார்
12) ஒரு ......அளவு ஒலிவ எண்ணெய் சேர்த்து திறமை வாய்ந்த
13 மேலே முதல் வளையம் ........இரட்டைக் கனமான
14) பழுதற்ற விளக்குத் ..........அதன் துணைக்கலன்கள்
16) இது புனிதமானது, உங்களுக்கும்..புனிதமானதாக இருக்கட்டும்
17) நானும் அவர்களிடம்......அணிந்திருப்பவர்கள் கழற்றி
18) நான் அவனை இறை........யால் நிரப்பியுள்ளேன்
23) எங்கள் ......களையும் பாவத்தையும் மன்னித்து
24) அதற்காக சித்திம் மரத்தால்......துளைகள் செய்தார்.
25) தனக்கு அடுத்திருப்பவனையும் வெட்டி வீழ்த்த .....ம் என்றார்.
26) ஆண்டவருக்கு ..........யாக கொண்டு வந்தனர்
27) என் கையால் உன்னை.........மறைப்பேன்.
28) தலைமுறை தோறும் ஒய்வுநாளாக கைக்..........வேண்டும்.

### மேலிருந்து கீழ்

1) அவ்வாறே...... எல்லோரும் தங்கள் பொன்காதணிகளைக்
3) ...... அதன் தண்டுக்கள், திருப்பொழிவு எண்ணெய்
4) உரு தொங்கு செய்தார். ....... கடும் சிவப்பு சிவப்பு
5) அவர் இரு வளையங்களை ... பக்கத்திற்கும் இரு வளையங்
7) உனக்கு கட்டளையிட்டபடி ......அனைத்தையும்
11) ...... நிற நூலாகவும் முறுக்கேற்றி செய்த
12 அடிபட்டவர்க்கு........ கெட்டுப் போனால் ஈடாக விடுதலை
14 தன் சகோதரர்களையும் ..... நண்பனையும் தனக்கு அடுத்திருப்பவர்களையும்
17) உன் மாடுகள் ஆடுகள் ஆகியவற்றைப் ..... த்த மட்டில் நீ
18 அந்த மலைக்கு எதிரே ....... மாடுகள் மேயக் கூடாது.
19 ......வேலைகளில் ஈடுபட்டிருந்த கலைஞர்கள் தாங்கள் செய்து
25) அங்கே ஒரு .......உங்கள் பாவத்திற்காக நான் கழுவாய்

### வலமிருந்து இடம்

1) அலர்கள் செய்து வைத்திருக்கும் கன்றுக் ...... யை எடுத்து
2) நறுமணத்த ...... கூடார வாயிலுள்ள தொங்கு திரை
7) ...... மோசேக்கு ஆண்டவர் கட்டளைப்படியே செய்யப்பட்டது.
9) ....... அடிப்பு வேலையாகச் செய்தார். அதன் அடித் தண்டு
12) இந்தக்.....விகிதப்படி இதைப போன்ற எண்ணெய் தயாரிக்கப்படலாகாது.
14) அந்நாளில் வேலை செய் பலன் என்னும்...... மக்களிடமிருந்து
15) ....பீடத்தை அணுகும் போது அவர்கள் கழுவிக் கொள்வார்கள்.
18) ........மக்களைக் கட்டுப்பாடின்றி விட்டுவிட்டதால்
19) அதை இடித்து தண்ணீரில்.......இஸ்ரயேல் மக்களைக் குடிக்கச் செய்தார்
20) ........சேர்க்கப்பட்ட துப்பரவான நறுமணக்கட்டியை
24) அதன் ...... மூலைகளிலும் அவர் கொம்புகளை அமைத்தார்

### கீழிருந்து மேல்

5) அவை ஒவ்வொன்றிலும் ...... பெயர் வீதம் 12 பெயர்கள்
8) இத்தாமரின் பொறுப்பில் லேவியர் எடுத்த .......... பின்வருமாறு
9 அனைத்து துணைக்கலன்கள் திருமுன்னிலை ..........
10) நார்ப்பட்டால் தலைப்பாகையும் ........ கூறும்.
18) ஒரு மாட்டுக்கு 5 மாடும் ஒரு ஆட்டுக்கு 4.......என்று ஈடு கட்டுவர்.
21) அதில் ஒரு பகுதியை.......பொடியாக்கி நான் உனக்கு காட்சி தரும்.
22) என் மாட்சி கடந்து செல்கையில் ......உன்னைப் பாறைப் பிளவில்.
26) மனமுடையோர் அனைவரும் ........கள் காதணிகள், மோதிரங்கள்.
27) ஒரு பகுதியில் 15 முழுத்தொங்கு திரைகள்.........மூன்று தூண்கள்.
28) தம் கையில் இரு கற்பலகைகளையும் ...........போனார்.

## விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி சரியான பதில்கள்

### விடுதலைப் பயணம் 1:20

#### இடமிருந்து வலம்

1. ஆண்டவர் 16:4
2. தண்ணீரைப் 15:23
3. சணல் 9:31
4. தலைமுறை 16:32
5. முறையீடு 2:23
6. எப்பா 16:36
9. குதிரை 16:28
12. தண்ணீர் 4:9
13. பணிகாரம் 16:31
14. அடிக்க 8:17
16. கொத்தமல்லி 16:31
19. பூவா 1:15
21. பெரும் 12:30

#### வலமிருந்து இடம்

7. ஒவ்வெரு 2:21
8. போனால் 17:4
11. பெயரை 20:7
14. அழுது 2:23
15. கண்டு 6:1
18. மேலும் 11:3
22. அப்பம் 13:7
24. எகிப்து 7:21
25. பேரிடி 19:16

#### மேலிருந்து கீழ்

1. ஆழங்களில் 15:5
2. தலைக்கு 16:22
4. தண்டி 3:20
16. கொடுத்து 5:7
17. மணம் 8:19
23. கால் 9:3

#### கீழிருந்து மேல்

10. திரும 9:30
20. கோல் 8:17
22. அவர் 18:2
23. கார்மேகம் 19:16
26. லேவி 6:16
27. ஆரோன் 7:1

## விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி- 74 வெற்றியாளர்கள்

1. திருமதி: யேசுதாசன் வேர்ஜினியா - Neuilly Plasance
2. குளோரியா பிரசாந்தன் - Villtaneuse
3. திருமதி: டக்ளஸ் டானி - Neuilly sur Marne 1

1. திருமதி: றொபின் கூட் சகிலா - Saint Denis
2. திருமதி: லடிஸ்லஸ் யோகமலர் - Nanterre
3. திருமதி: நீற்றா செல்வரட்ணம் - Neuilly sur Marne
4. செல்வி: சு. லூசியா - Paris
5. திருமதி: றெஜினா பிறிஜெட் - Sevra
6. திருமதி: யேசுதாசன் ஜொய்ஸ் - Clemart
7. திரு. அருளப்பு கிறிஸ்ரியன் - Paris
8. திருமதி: அன்று - Meaux
9. திருமதி: கெலனா யோசவ் - Garges les Goness
10. திருமதி: பிறிம்றோஸ் டலஸ் - Creteil
11. செல்வி: சத்தியேந்திரா மெல்றின் - Paris
12. திருமதி: மரிய செல்வநாயகம் - Noisy le sec
13. செல்வி: யோ.சியாமளா - Drancy
14. திருமதி: கொன்சன்ரைன் கருணாமலர் - Vigneux s/s
15. திருமதி: சங்கர் ஜெனீபா - Vigneux sur seine

# பணியகச் செய்திகள்



**தி**ருமண ஆயத்தம் பெறவிரும்புவோர் 3 மாதத்திற்கு முன்பாக அருட்பணியாளருடன் தொடர்பு கொள்ளவும்.

**13-11-2021 அன்று 9 - 17 மணிவரை திருமண அருட்சாதன வகுப்பு, பெல்வில் சிற்றாலயத்தில் நடைபெறும்.**

**தி**ருமுழுக்கு ஆயத்தம் பெற விரும்புவோர் ஒரு மாதத்திற்கு முன்பாக அருட்பணியாளருடன் தொடர்பு கொள்ளவும்.



**திருமுழுக்கு ஆயத்த வகுப்பு**

**ஒக்டோ:** புதன் 20ந் திகதி - சனி 23ந் திகதியும்
**நவெம்:** புதன் 24ந் திகதி - சனி 27ந் திகதியும்
**டிசெம்:** புதன் 08ந் திகதி - சனி 11ந் திகதியும்
திருமண ஆயத்த வகுப்பு, பெல்வில் ஆலயத்தில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

குறுக்கெழுத்து போட்டியின் விடைகளை தயவு செய்து 05-12-2021 க்கு முன்பு பணியகத்திற்கு அனுப்பி வையுங்கள். நன்றி




## ஒக்டோபர்- பணித்தளத் திருப்பலிகள்

**03 -10 - 2021 - பன்னாட்டுத் திருப்பலி**
11:00 - Eglise St. Joseph des Nations – Paris

**10 -10 - 2021 - செபமாலை அன்னை திருவிழா பணித்தளப் பெருவிழா**
16:30 - Notre Dame de Blanc - Mesnil

**17-10- 2021 - சதாசகாய மாதா திருவிழா பணித்தளப் திருவிழா**
16-30 - Eglise St André - Chelles

**24 - 10 - 2021 - பணித்தளவிழா - Créteil**
17:00 - Eglise St Christhophe - Créteil

**31–10 -2021 - ஒப்புரவு அன்னை திருவிழா (ஆன்மீகப் பணியக விழா)**
12:30 Eglise St. Joseph des Nations-75011-Paris

## நவெம்பர் - பணித்தளத் திருப்பலிகள்

**01-11-2021 - அனைத்து புனிதர்கள் பெருவிழா**
17:00 Chapelle NDR. de Belleville – 75011 - Paris

**02-11-2021 - அனைத்து ஆன்மாக்களின் நாள்**
17:00-Eglise St. Joseph des Nations-75011-Paris

**28- 11-2021 புனித சிசிலியா திருவிழா**
11:30 Chapelle NDR. de Belleville - 75011 - Paris

## டிசெம்பர் - பணித்தளத் திருப்பலிகள்

**05-12-2021 - புனித நிக்கொலா திருவிழா**
12:30 - Eglise St. Joseph des Nations - Paris

**08 - 12 - 2021 - மரியாயின் சேனை திருவிழா**
17:00 - Chapelle NDR. de Belleville -75011 - Paris

**12 - 12-2021 - அமலோற்பவ அன்னை பெருவிழா**
11:30 - Chapelle NDR. de Belleville - 75011 - Paris

**19- 12-2021 - புனித தோமையார் திருவிழா**
10:30 - Chapelle NDR. de Belleville - 75011 - Paris

**24-12-2021 கிறீஸ்து பிறப்பு பெருவிழா (இரவு)**
18:00 - Eglise Ste.Genivieve - Garges Sarcelle
20:30 - Basilique N.D. Perpetuel secours
55 BD de Ménilmontant - 75011- Paris

**25– 12-2021 கிறீஸ்து பிறப்பு பெருவிழா (பகல்)**
12:30 - Eglise St. Joseph des Nations - Paris

**31–12-2021 புதுவருடத் திருப்பலி**
21:00 - Eglise St. Joseph des Nations - Paris
21:00 - Eglise St. Christophe – 94000 - Créteil
22:30 - Eglise Ste.Genéivieve - 95140 - Sarcelles
22:30 - Notre Dame de Blanc - Mesnil

**01-01-2022 புதுவருட பெருவிழா திருப்பலி**
08:45 - Eglise Ste.Bathilde -75500 - Chelles
12:30 - Eglise St. Joseph des Nations – Paris

# இளையோர் அரங்கு

28-08-2021ந் திகதியன்று அருட்பணி: மதன் போல் அடிகளாருடன் இளையோர் இணைந்து மேற்கொண்ட சுற்றுலா பயணம்

(நெவர் புனித பெர்னாடெட் அடிச்சுவடுகளில் மற்றும் கெட்டின் கால்வாய் பாலம்)













